Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்


பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 ஐப்பசி-04 20-10-2004 புதன்கிழமை ஓசை -245

படச்சுருள்கள் அனைத்தையும் கணினிதொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள் படம் பிறேம்செய்தல்,
R.V
பந்தல் சேவை, தர்மபுரம்.
அனைத்திற்கும் பொற்காலம் வண்ணக்கலையகம், யாழ்சாலை, கிளிநொச்சி.

(சி-10563)

## கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சிங்கப்பூர் பயணம்



(கொழும்பு)

கடற்புலிகளின் சிறப்புத் தளபதியான கேணல் சூசை கட்டுநாயக்க விமானநிலையம் ஊடாக வெளிநாட்டிற்குப் பயணமானதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மருத்துவ சிகிச்சைக்காகச் செல்லும் இவர் சிங்கப்பூர் சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

# இந். சிறிலங்கா பாதுகாப்பு உடன்பாடு

# கைச்சாத்துக் குறித்து தீவிர பேச்சு!

## கொழும்பு வந்த இந். அதிகாரிகள் பல தரப்புடனும் சந்திப்பு

(கொழும்பு)

**இலங்கை, இந்தியா பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் தினம் குறித்து துரிதமாகத் தீர்மானிக்கப்படுமெனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார். இது தொடர்பாக நேற்று விசேட பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றது.**

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்திற்கும் இந்திய பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர்களுக்குமிடையில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தை குறித்து பாதுகாப்பு அமைச்சரின் செயலாளர் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை இந்தியாவின் பாதுகாப்பு உயர்மட்டக்குழு நேற்றும் இன்றும் இலங்கையின் உயர்மட்ட பாதுகாப்புத் தரப்பினருடன் முக்கிய கலந்துரையாடல்களை நடத்துவதாக பாதுகாப்புத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. நேற்று முன்தினம் காலை இலங்கை வந்தடைந்த குழுவினர் இலங்கை இந்தியா பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து இறுதி வடிவங்களை ஆராய்வதற்காகவே இந்தக் கலந்துரையாடல்கள் நடத்துவதற்காக அரசமட்டச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இந்தியாவிடம் இருந்து பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட உபகரணங்களைக் கொள்வனவு செய் (12ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

11.03.2000 அன்று சிறிலங்கா கடற்படையினருடனான நேரடி மோதலின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

☐ கப்டன்-அப்பன் அரியதாஸ்-அலெக்ஸ் வினோதன், சொ.இடம்-வலித்தூண்டல் கீரிமலை யாழ், தற்.இடம்-பரஞ்சோதி வளவு உடையார்கட்டு முல்லை.

22.06.2002 அன்று தேச விரோதி களினால் படுகொலை செய்யப்பட்டு போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பினர் இந்தியா பயணம்?

(கொழும்பு)

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் இந்திய நாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளனர் சமாதான முனைப்புகள் தொடர்பிலேயே இந்த விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது இந்த விஜயமானது சனாதிபதியின் இந்திய விஜயத்தின் முன்னரோ அல்லது பின்னரோ இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

## வீட்டிலிருந்த மூவர் இடிதாக்கி மரணம்

(கொழும்பு)

கொழும்பு கிருலப்பனை நாகஸ்தன்ன தோட்டத்தில் இடி மின்னல் காரணமாக மூவர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது சம்பவத்தின் போது இவர்களின் வீடு இடிந்து வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

## ஏறாவூர் ஐயங்கேணியில் ஒருவர் சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

ஏறாவூர் ஐயங்கேணி கிராமத்தில் இனம் தெரியாத நபர்களினால் ஒருவர் நேற்று முன்தினம் இரவு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். வெள்ளைராயூ என்று அழைக்கப்படும் கதிர்காமத்தம்பி ராயூ என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். வீட்டில் நித்திரையிலிருந்த நபர் மீது அங்குவந்த ஆயுதக் குழுக்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுவிட்டனர்.

## தேசவிரோதிகள் தாக்குதலில் இரு நாட்டுபற்றாளர்கள் பலி

சிறிலங்காப் படையினரின்கட்டுப்பாட்டுப் பகுதியான மட்டக்களப்பு புதூர்நகரில் சனிக்கிழமை அதிகாலை தேச விரோதிகள் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் புதூர் 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குமாரசூரியம் மகேஸ்வரன் அல்லது தினேஸ் நேற்று அதிகாலை வீரச்சாவடைந் துள்ளார் அன்றைய தினம் நள்ளிரவில் நாவற்காடு கரவெட்டியைச் சேர்ந்த புவனசிங்கம் பாக்கியரெத்தினம் அல்லது சோதிபாலன் என்பவரும் தேசவிரோதக் கும்பலால் மட்டு நகர்ப்புறத்தில்,இருதயபுரச் சந்தியில் வைத்து (12ஆம் பக்கம் பார்க்க)

# தனது அமெ., கனடா விஜயம் குறித்து

# பாலசிங்கத்திடம் எரிக் விபரிப்பு





AP

(லண்டன்)

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசிய நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் தனது அண்மைய அமெரிக்க, கனடா விஜயங்கள் குறித்துக் கருத்துரைகளைப்பரிமாறிக் கொண்டதாகத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர், அன்ரன் பாலசிங்கத்திற்கும் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சூல்ஹெய்மிற்கும் இடையிலான சந்திப்பு இலண்டனில் உள்ள அன்ரன் பாலசிங்கத்தின் இல்லத்தில் நடைபெற்றது. இச்சந்திப்பில், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறஸ்கரும், அடேல் பாலசிங்கமும் கலந்து கொண்டனர். அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்த எரிக் சூல்ஹெய்ம், இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து அந்த நாட்டு இராஜதந்திரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் தொடர்பாக இச்சந்திப்பில் அன்ரன் பாலசிங்கத்துக்கு எடுத்து விளக்கியுள்ளார். அத்துடன் இச்சந்திப்புக்களின் போது, அமெரிக்க மற்றும் கனேடிய இராஜதந்திரிகள் இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதை இருதரப்பினரையும் வலியுறுத்தும்படி தன்னிடம் தெரிவித்ததாக எரிக்சூல்ஹெய்ம்அன்ரன் (12ஆம் பக்கம் பார்க்க)

# கிங்ஸ்லி இராசநாயகம் நேற்று சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராகப் போட்டியிட்ட கிங்ஸ்லி இராசநாயகம் (வயது 62) நேற்றுக் காலை இனத் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார்.

இவர் மட்டக்களப்பு இருதயபுரம் கள்ளியங் காட்டுப் பகுதியில் உள்ள தமது வளவிற்குச் சென்று விட்டு அங்கிருந்து புறப்படுவதற்காக வாகனத்தில் ஏற முற்பட்டபோது துப்பாக்கி தாரியினால் இவர் சுட்டுக் கொல்லப்படடுள்ளார். நேற்றுக் காலை ஆறு மணியளவில் நடைபெற்ற இந்தத் துப்பாக்கிச்

### மெய்க்காப்பாளரும் காயம்

சூட்டுச் சம்பவத்தின் போது இவரது பாதகாப்பு உத்தியோகத்தர் ஒருவரும் காயமடைந்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராகக் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு நான்காவது இடத்தில் வெற்றியீட்டிய இவர் பின்னர் பாராளுமன்றப் பதவியைப் பொறுப்பேற்காமலே இராஜினமாச் செய்தார். என்பதுடன் இவர் அரச வங்கி ஒன்றில் சிரேஷ்ட அதிகாரியாகக் கடமையாற்றி வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சனாதிபதி உடன்பாட்டை மீறுவதால் அரசாங்கத்திலிருந்து விலகவேண்டி வரும்

### -ஜே.வி.பி அபாய எச்சரிக்கை

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகாவின் தற்போதைய அரசியல் நடவடிக்கையாவும் ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஒப்பந்தத்திற்கு மாறாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

இந்நடவடிக்கைகளை சனாதிபதி அவர்கள் நிறுத்தாவிட்டால் அரசாங்கத்திலிருந்து விலகநேரிடும் என அபாய அறிவித்தலை ஜே.வி.பி அரசியல் பீடம் விடுத்துள்ளது.

கடந்த 15ஆம் திகதி கொழும்பில் இரு கட்சிகளுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஜே.வி.பி இந்தத் திடீர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இதன் பின் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதம செயலாளர் மைத்திரிபாலசிறிசேன அவசர பேச்சுவார்தை நடத்துவதற்கு சனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஆனால் அதை ஜே.வி.பி நிராகரித்துள்ளது. நான்கு பிரதி அமைச்சர்களைச் சமீபத்தில் சனாதிபதி நியமித்திருப்பதே இந்த முறுகல் நிலைக்குக் காரணம் என பத்திரிகைச் செய்தி கூறுகின்றது.

## தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு கொழும்பில் ஐ.தே.க.யினர் ஆர்ப்பாட்டம்!

### -ஆறு முக்கிய இடங்களில் ஐ.தே.க. யினர் கூடினர்

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசிற்கு எதிராக நேற்றுக் கொழும்பில் பெரியளவில் ஆறு ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளது.

சந்திரிகா தேர்தலுக்கு முன்னர் மக்களுக்கு வழங்கிய உறுதி மொழிகளை நிறைவேற்றுமாறும் அதிகாரித்துச்செல்லும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துமாறும் கோரியுமே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.மேற்படிஆர்ப்பாட்டங்கள்கொழும்பில் ஆறு முக்கியஇடங்களில் நடைபெற்றுள்ளது.

கொள்ளுப்பிட்டி, மருதானை தொழில் நுட்பக்கல்லூரிச் சந்தி, கொச்சிக்கடை, கொம்பனித்தெரு, பேலியகொட, ஹைபாக் மைதானம் ஆகியவற்றிலேயே இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன.

இதன்போது“ சாப்பாடு கொடுக்காமல் மக்களைப் பட்டினி போட்டுக் கொல்லும் அரசாங்கம்” எனக் கோஷம் எழுப்பப்பட்டது.

அரசாங்கத்தில் குழப்பமும், முரணான கருத்துக்களும் நிலவுகின்றன. அதனால் சமாதானச் செயற்பாடு முழுமையாக ஸ்தம் பிதம் அடைந்துள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

### நிவாரணம், புனர்வாழ்வு, மீளிணக்கத்துக்கான அமைச்சு

### வடக்கு கிழக்கு புனர்வாழ்வு சம்பந்தமாக உலக வங்கியின் உதவியுடன் செயற்படுத்தப்படும் திட்டம்.

### வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் [நியாப்] கட்டம் - II

# சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர் பதவி வெற்றிடம் (13)

## முல்லைத்தீவு மாவட்டம்

வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் கட்டம் - II உலக வங்கியின் அனுசரணையுடன் செயற்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டம் வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களிலும் இம் மாகாணத்திற்கு அண்டிய மாவட்டங்களான அனுராதபுரம், பொலநறுவை, மொனறாகலை, புத்தளம் ஆகிய மாவட்டங்களிலும் 2005-2010ஆம் ஆண்டுகளில் செயற்படுத்தப்படவுள்ளது.

நிவாரணம், புனர்வாழ்வு, மீளிணக்கத்துக்கான அமைச்சினாலும், வடகிழக்கு மாகாண சபையினாலும் கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகளையும் அனுபவங்களையும் பெற்றவர்களிடமிருந்து சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர் பதவிக்கு முல்லைத்தீவு மாவட்டத்திற்கென 13 பேர் வேலையில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். இப்பதவிக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் புதிதாக விண்ணப்பிக்க வேண்டும்.

01.பொது விதிகள :-

பதவி தற்காலிகமானது. முதலில் ஒரு வருடத்திற்கு நியமனம் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும். பின் நிறுவனத்தின் தேவைக்கு ஏற்பவும், முதல் வருட சேவைகாலத்தில் திருப்திகரமாக சேவை ஆற்றியிருப்பினும் தொடர்ந்தும் சேவை நீடிப்பு வழங்கப்படும்.

02. வயதெல்லை- வ'ண்ணப்பதாரி விண்ணப்பிக்கும் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

இவ் வயதெல்லையிலிருந்து அரச சேவையில் உள்ளவர்கள், கூட்டுத்தாபனங்களில் கடமை புரிபவர்கள் ஆகியோர் விதிவிலக்குப் பெறுவர்.

03.சம்பளம் -இந்நியமனம் முதலில் 3 மாத காலத்திற்கு பயிற்சி அடிப்படையிலும், அதன் பின்பு ஒப்பந்த அடிப்படையிலும் வழங்கப்படும். பயிற்சிக்காலத்தில் ரூபா 6,000 (சகலபடிகளும் உட்பட) பயிற்சிக்காலப் படியாக வழங்கப்படும். பயிற்சிகள் முதலாவது மாதத்தில் திருகோணமலையிலும் அதன் பின்பு அந்தந்த மாவட்ட நியாப் காரியாலயத்திலும் வழங்கப்படும்.

3.1 பட்டதாரிகளுக்கு :-

புதிய பட்டதாரிகளுக்கு மாதாந்தச் சம்பளம் ரூ9,375 உடன் இடைக்காலப்படியாக ரூ 2,200/= வும் வழங்கப்படும். ஏனையோருக்கு முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் இல-10இன் பிரகாரம் சம்பளம் பேசித்தீர்க்கப்படும்.

3.2. டிப்ளோமா தகைமையுள்ளவர்களுக்கு :-

நேரடியாக வேலையில் இணைவோருக்கு மாதாந்தச் சம்பளமாக ரூ5,570 உடன் இடைக்காலப் படியாக ரூ2,200உம் வழங்கப்படும். ஏனையோருக்கு முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 10இன் பிரகாரம் சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

3.3. க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு :-

நேரடியாக நியமனம் பெறுவோருக்கு மாதாந்தச் சம்பளமாக ரூ.5,240 உடன் இடைக்காலப்படியாக ரூ.2,200உம் வழங்கப்படும். ஏனையோருக்கு முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 10 இன் பிரகாரம் பேசித்தீர்க்கப்படும்.

04. கொடுப்பனவு :-

4.1. சம்பளம் மாதாந்தம் வழங்கப்படும் ஏனைய படிகள் அவர்களது வேலைத்திறனின் அடிப்படையிலேயே வழங்கப்படும்.

4.2. அரச சேவையில் இருந்து விடுப்புப்பெற்று இச்சேவைக்கு வருவோர் அல்லது ஓய்வுபெற்றவர்களுக்கான சம்பளங்கள் அவர்களது இறுதிச் சம்பளத் தொகைக்கேற்ப பேசித்தீர்மானிக்கப்படும். இடைக்காலப்படிகள் வேலைத்திறனின் அடிப்படையில் வழங்கப்படும்.

05. விண்ணப்பதாரி :-

1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் 2. திட்டம் நடைபெறும் இடத்தில் சேவையாற்றக்கூடிய சுக, தேக ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும். 3. குறிப்பிட்ட இலக்குக் கிராமத்தில் வசித்தல்.

06. விண்ணப்பிக்கும் முறை :-

தகுதியான விண்ணப்பதாரிகள் தங்களது கல்வித் தகைமைகள், தொழில்தகைமை, முன்னைய வேலை அனுபவங்கள் ஆகியவற்றுடன் தமது சுய விபரத்தினையும் விரும்பும் மாவட்டத்தையும் குறிப்பிட்டு விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி பதிவுத் தபால் மூலம் பிரதித்திட்டப்பணிப்பாளர், நியாப்திட்டப் பணிமனை, நீர்ப்பாசனவளாகம், ஒட்டுசுட்டான் என்ற முகவரிக்கு 10.11.2004ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

விண்ணப்பம் அனுப்பும் தபால் உறையின் இடது பக்கமேல் மூலையில் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். அரச சேவையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பத்தினை தமது திணைக்களத்தலைவர்/செயலாளர் ஊடக அனுப்புதல் வேண்டும். இப்பதவிக்கு பெண்களும் விண்ணப்பிக்கலாம்.

07.தெரிவு :-

பொருத்தமானவர்கள் மாவட்ட அடிப்படையில் நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவுசெய்யப்படுவார்கள். இதில் 50வீதம் பெண்கள் தெரிவுசெய்யப்படுவர்.

08. கடமைகளும், பொறுப்புக்களும் :-

★ மையக்கிராமங்களிலுள்ள மக்களுக்கும் பிரதேச செயலாளர் மட்ட உத்தியோகத்தர்களுக்கும் இடையே திட்டம் சம்பந்தமான விழிப்புணர்வினை ஏற்படுத்தி அவர்களிடையே நெருக்கமான தொடர்பினை ஏற்படுத்தல்.

★ மையக்கிராமங்களுக்கான சமூகப் பொருளாதார நிலைமை சம்பந்தமான அறிக்கையினையும், கிராம அபிவிருத்தித் திட்டத்தினையும் தயாரித்தல்.

★ திட்டத்தின் சிவில்சார் கூறுகளைத் திட்டமிட்டு அமுலாக்கி இணைப்பாக்குதல்.

★ மையக்கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்படும் ஜீவனோபாய ஆதாரத்திட்டம், சிறு குழுக்கள் அமைத்தல், சிறுகுழு சேமிப்பு, நுண்கடன் பராமரிப்பு, பதிவேடுகள் பேணுதல் போன்ற விடயங்களினைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி இணைப்பாக்குதல்.

★ கிராம மட்ட அமைப்புக்களின் நிறுவனக் கட்டமைப்பு விருத்திக்கு உதவுதல்.

★ மையக்கிராமங்களில் பயிற்சிகள் நடத்துவதும் பயிற்சிகளை ஒழுங்குபடுத்துவதும்.

★ திட்ட முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குச் சமர்ப்பித்தல்.

9. கல்வித்தகைமைகளும் ஏனைய தகைமைகளும் :-

9.1 சமூக விஞ்ஞானம், சமூகவியல், விவசாயம், புவியியல், பொருளியல், வர்த்தகம், வணிகமும் முகாமைத்துவமும் ஆகிய துறைகளில் பல்கலைக்கழகப் பட்டத்தைப் பெற்றிருப்பதுடன் சமூக உணர்வூட்டல் அல்லது அது தொடர்பான விடயத்தில் மூன்று (3) வருட சேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

9.2. விவசாயம், சமூகவிஞ்ஞானம், வர்த்தக அபிவிருத்தி ஆகிய துறைகளில் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.அத்துடன் சமூக உணர்வூட்டல் அல்லது அதனுடன் தொடர்புபட்ட துறைகளில் ஐந்து (5) வருடசேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

9.3. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் புவியியல், கணக்கீடு, வர்த்தகம், பொருளியல், வணிகக்கல்வி ஆகிய பாடங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் எட்டு (8) வருடங்கள் சமூக உணர்வூட்டல் அல்லது அதனுடன் தொடர்புபட்ட துறைகளில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

9.4. ஆங்கிலத்தில் நல்ல புலமையும், தமிழ் மொழியில் சமூகத்தவருடன் கருத்துக்களைப் பரிமாறும் ஆற்றலும் இருப்பின் விசேட தகைமைகளாகக் கொள்ளப்படும்.

திரு.K.விஸ்வலிங்கம்,
பதில் அரச அதிபர்,
கச்சேரி,
முல்லைத்தீவு.

(சி-10507)

# ஈராக் போருக்கு எதிராக லண்டனில் ஊர்வலம் ஆக்கிரமிப்புக்கு முடிவுகட்டக் கோரிக்கை

**ஈராக்கின் மீது போர் தொடர்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அதை உடனடியாகக் கைவிடக்கோரியும் லண்டனில் 20 ஆயிரத் திற்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு ஊர்வலம் ஒன்றை நடாத்தியுள்ளனர்.**

. பேரழிவு ஆயுதங்களை சதாம் ஹுசைன் பதுக்கிவைத்து இருப்பதாகக் கூறி அதை அழிப்பதற்காக அமெரிக்காவும், இங்கிலாந்தும் சேர்ந்து ஈராக்மீது போர் தொடுத்தன. சதாம்ஹுசைன் ஆட்சியை அகற்றிய பிறகு பேரழிவு ஆயுதங்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகக் கிடைத்த தவறான தகவலைத் தொடர்ந்து தான் போர் நடத்தப்பட்டது என்பதை ஒப்புக்கொண்ட பிரதமர் ரொனிப்பிளேயர் அதற்காக மன்னிப்புக் கேட்டார். இருந்தபோதிலும் ஈராக்கில் அலைந்த அமெரிக்க இங்கிலாந்துப் படைகள் அங்கே தொடர்ந்து தங்கியிருந்து தீவிரவாதிகளுக்கு எதிராக யுத்தம் செய்து வருகின்றன.

இந்தப்போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் அமெரிக்க, இங்கிலாந்துப் படைகள் ஈராக்கைவிட்டு வெளியேற வேண்டும் என்று கோரி லண்டனில் ஊர்வலம் நடந்தது. இதில் கிட்டத்தட்ட 20ஆயிரம் பேர் கலந்துகொண்டனர்.

ஈராக்தீவிரவாதிகளால் சிறைபிடிக்கப்பட்டுத் தலைதுண்டித்துக் கொல்லப்பட்ட கென்னத்பிக்லேயின் சகோதரர் பால்பிக்லே இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ளும்படி மக்களுக்கு அழைப்பு விடுத்தார். ஆனால் அவர் இதில் கலந்து கொள்ளவில்லை.

ஈராக்கில் பஸ்ரா நகரில் கடந்தஆண்டு கொல்லப்பட்ட இங்கிலாந்து வீரர் தாமஸ் கேய்ஸ்சின் தந்தை ரெக்கேய்ஸ் கூறுகையில் "ரொனிப்பிளேயர் நம் பகத்தன்மையை இழந்துவிட்டார். கொலைக்களமான ஈராக்கில் இருந்து இங்கிலாந்து இராணுவம் உடனடியாக நாடுதிரும்ப வேண்டும்" என்று கூறினார்.

இந்த ஊர்வலம் மத்திய லண்டனில் உள்ள ஒரு சதுக்கத்தில் இருந்து புறப்பட்டு வெஸ்ட்மினிஸ்டரிஸ் உள்ள ட்ராபல்கர் சதுக்கத்தில் முடிவடைந்தது. இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களில் 9பேர் கைதுசெய்யப்பட்டனர். பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்ததாலும் மிரட்டல் பாணியில் நடந்து கொண்டதாலும் அவர்கள் கைதானார்கள். ஈராக் போரில் புஷ்சுக்கு ஆதரவு கொடுப்பதற்காக மக்கள் செல்வாக்கில் சரிவுகண்ட பிரதமர் ரொனில் பிளேயருக்கு இந்த ஊர்வலம் மேலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.



பாக்தாத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பில் பலியான ஒருவரை அப்புறப்படுத்தும் தேசிய பாதுகாப்புப் படையினர்.

# 60 இந்திய மீனவர்கள் பாக்.படையினரால் கைது

இந்தியக் கடல் எல்லையில் மீன் பிடித்துக்கொண்டிருந்த 60 மீனவர்களைப் பாகிஸ்தான் கடற்படையினர் கைது செய்துள்ளனர். இது குறித்து இந்தியமீனவர்கள் சங்கத்தலைவர் வேல்ஜிபாய் மசானி நேற்று முன்தினம் நிருபர்களிடம் கூறியதாவது;

குஜராத் தெற்கில் உள்ள கடலோர நகரான வனக்கப்பாரா பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் இந்தியக்கடல் எல்லைப்பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்தனர். அவர்களில் 60இற்கும் மேற்பட்ட மீனவர்களைப் பாகிஸ்தான் கடற்படையினர் கைது செய்துள்ளனர். அவர்களிடம் இருந்து 10படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அரபிக் கடலில் இந்தியக்கடல் எல்லைக்குட்பட்ட பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த போதே பாக்.படையினர் கைது செய்துள்ளனர். பாக்.சிறையிலுள்ள மீனவர்களை விடுவிக்க அந்நாட்டு அதிபர் முஷாரப் உறுதியளித்துள்ளார். ஆனால் பாக்.படையினர் தொடர்ந்து இந்திய மீனவர்களைத் துன்புறுத்தி வருகின்றனர். இவ்வாறு மசானி கூறினார்.



ஈராக்கில் அமெரிக்கப்படையினரின் பாதுகாப்பின் மத்தியில் நீதிமன்றத்திற்குச் செல்லும் நீதியாளர் ஒருவர்.

# அல்–ஹைதாவுடன் இணைந்து செயற்பட ஈராக் தீவிரவாத அமைப்பு முடிவு

(பாக்தாத்)

உலகெங்கும் தாக்குதல்கள் நடத்திவரும் அல்-ஹைதா தீவிரவாதிகளுடன் இணைந்து செயற்பட ஈராக்கைச் சேர்ந்த தீவிரவாத அமைப்பான அபுமுசாப் அல்-சர்க்காவி முடிவு செய்துள்ளது. இது குறித்து அந்த இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, அல்-ஹைதா இயக்கத்துடன் கடந்த 7 மாதங்களுக்கு முன்பே தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முயன்றோம். ஆனால் அந்த முயற்சி கைகூடவில்லை. கடவுளின் கருணையால் இப்போது மீண்டும் இரு அமைப்புகளும் இணைந்து செயற்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இஸ்லாமின எதிரிகளை அழிக்க ஒஸாமா பின் லேடனால் மட்டுமே முடியும். என வேதான் அல்-ஹைதாவுடன் இணைந்து செயற்பட முடிவு செய்துள்ளோம் எனவும் குறிப்பிட்டுள்ளது.

## ஜப்பானில் நிலநடுக்கம்

(டோக்கியோ)

ஜப்பானில் ஞாயிற்றுக் கிழமை இரு தடவை நில நடுக்கம் ஏற்பட்டது. இதனால் டோக்கியோ மற்றும் கிழக்கு ஜப்பான் பகுதி நகரங்கள் அதிர்ந்தன. நிலநடுக்கத்தின் அளவு 5.6 என ரிக்டர் அளவு மானியில் பதிவானது.

# வரலாறு காணாத அளவுக்கு உலக சந்தையில் பெற்றோல் விலை உயர்வு

(சிங்கப்பூர்)

தேவை உயர்ந்ததாலும் பங்கீடு குறைந்ததாலும் உலக சந்தையில் கச்சா எண்ணெய் (பெற்றோல்) விலை வரலாறு காணாத அளவுக்கு பீப்பாய் 55அமெரிக்க டொலராக உயர்ந்தது.

ஒரு ஆண்டுக்கு முன்பு இருந்த விலையை விட 70 சதவீதம் உயர்ந்துள்ளது.கடந்த செப்ரெம்பர் மாதம் மெக்சிக்கோ நாட்டில் 'இபான்'புயல் தாக்கியதால் உற்பத்தியில் தாமதம் ஏற்பட்டுள்ளது.இந்தஆண்டு இறுதியில் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் 60 அமெரிக்க டொலராக உயரும் என்று நிபுணர்கள் கணிக்கிறார்கள்.



அமெரிக்காவின் வேண்டுகோளின் படி ஈராக்கிற்கு மேலதிக படைகளை அனுப்பமுடியாதுள்ள தமது நிலை குறித்தும் இறுதிமுடிவை அடுத்த வாரம் அறிவிப்பதாகவும் பிரித்தானிய பாதுகாப்பமைச்சின் செயலர் பிரித்தானிய பாராளுமன்றத்தில் கூறுகின்றார்.

# கடந்த வெள்ளிமுதல் நேற்றுவரை ஈராக்கில் 4 கார்க்குண்டுத் தாக்குதல்

(பாக்தாத்)

ஈராக்கில் கடந்த 48 மணி நேரத்தில் நடைபெற்ற பல்வேறு குண்டுவெடிப்புச் சம்பவங்களில் 13 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர். துப்பாக்கிச் சண்டையில் மூன்று வயதுக் குழந்தை உட்பட 9 பேர் காயமடைந்தனர். கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கிய ரம்ழான் மாதத்தில் சண்டையை குறைத்துக் கொள்ளும்படி அமெரிக்க, ஈராக் அரசு விடுத்த கோரிக்கைக்கு எதிராக இது போன்ற சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. ஞாயிற்றுகிழமை மாலையில் ஜாத்ரியா மாவட்டத்தில் பொலிஸ் வாகனத்தின் மீது குண்டுகள் நிரப்பப்பட்ட கார் மோதியதில் அது வெடித்து 3 பொலிசார் உட்பட 6 பேர் கொல்லப்பட்டனர். இக் காரில் 600 கிலோ எடையுள்ள வெடி பொருட்கள் நிரப்பப்பட்டிருந்ததாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தனர். அதில் 11பொலிசார் உட்பட 26 பேர் காயமடைந்தனர். ஈராக்கின் வடக்கு நகரமான மோசூலில் ஒரு பாலத்தின் மீது சென்று கொண்டிருந்த காரின் மீது வெடிபொருட்கள் நிரப்பிய கார் மோதியது. இதில் 5 ஈராக் கியர்கள் கொல்லப்பட்டனர். 15 பேர் காயமடைந்தனர். இதில் ஏற்பட்ட தீயை அணைக்கும் பணியில் தீயணைப்புத் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து இது வரை கார்க் குண்டுகள் மூலம் தாக்குதல் நடத்துவது இது 4 ஆவது முறையாகும்.

இதனிடையில் ஈராக் தலைநகர் பாக்தாத்தில் சியா முஸ்லிம்கள் வசிக்கும் குடிசைப் பகுதியில் நடைபெற்ற குண்டு வெடிப்பில் 2 பேர் கொல்லப்பட்டனர். ஆயுதங்களுக்குப்பதில் பணம் என்ற பரிமாற்றத் திட்டத்தின் கீழ் அங்குள்ள மைதானத்தில் நூற்றுக் கணக்கான மக்கள் ஆயுதங்களுடன் குவிந்தனர். அப்போது இச் சம்பவம் நடந்தது. இதனிடையில் ஆயுதத்திற்குப்பதில் பணத்தை வழங்கும் திட்டத்தை மேலும் இரு நாட்களுக்கு நீடிப்பதாக ஈராக் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் காசீம் தாவூத் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் பணியாற்றும் அமெரிக்கப் படைகளுக்கு ஆயுதங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்களின் தட்டுப்பாடு கடந்த ஆண்டு இருந்ததாகத் தற்போது செய்திகள் வெளியாகியுள்ளன. ஈராக்கில் பணி புரிந்த அமெரிக்கப் படையின் மூத்த அதிகாரி ஒருவர் இது குறித்து கடந்த ஆண்டில் பென்டகனுக்கு (அமெரிக்க இராணுவத் தலைமையகம்) கடிதம் எழுதியிருந்தார். இது தற்போது பத்திரிகைகளில் செய்தியாக வந்துள்ளது.

## ஐ.நா கோரிக்கை

2015 ஆம் ஆண்டிற்குள் வறுமை நிலையை அரைவாசிக்குக் குறைப்பதென்று தங்கள் வாக்குறுதியை நிறைவேற்றுமாறு ஐ.நா அமைப்பு அனைத்து அரசுகளையும் கேட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 4 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற உலகளாவிய உச்சிமாநாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்ட மிலேனியம் வளர்ச்சி இலக்குகளுக்கிணங்க இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாகாண துணைப்பிரதமர் ரஷ்யாவில் சுட்டுக்கொலை

(மொஸ்கோ)

ரஷ்யாவின் கராசயோவோ-செர்கஷியா மாகாணத்தின் துணைப் பிரதமர் அன்சார் திபுயேவ் மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மாகாணத்தின் தலைநகர் செர்கெஸ்க் நகரில் ஞாயிற்றுக்கிழமை காலையில் அலுவலகத்திற்குக் காரில் செல்லும் போது அடையாளம் தெரியாதவர்கள் தானியங்கித் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டனர். இதில் அவர் அதே இடத்தில் உயிரிழந்தார். இச்சம்பவத்திற்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

# மத்திய ஆசிய கூட்டுறவு அமைப்பில் ரஷ்யா இணைவு

மத்திய ஆசிய பொருளாதார கூட்டுறவு அமைப்பில் இணைகிறது ரஷ்யா. திங்கட்கிழமை நடைபெறும் நிகழ்ச்சியில் இந்த அமைப்பில் இணைவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார் ரஷ்ய அதிபர் புட்டின். இந்த அமைப்பில் ரஷ்யா சேருவதற்குக் கடந்த மே மாதத்திலேயே கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகியவை ஆதரவு தெரிவித்திருந்தன. மண்டல அளவிலான பொருளாதார உறவு தவிர இந்த அமைப்பு தீவிரவாதத்திற்கெதிரான நடவடிக்கை, போதைப்பொருள் கடத்தல் தடுப்பு உட்பட பல்வேறு விடயங்கள் பற்றிக் கூடி ஆலோசனை நடத்தும்.

## காது,மூக்கு,தொண்டை சத்திரசிகிச்சை 22 இல் கிளி. வைத்தியசாலையில் நடைபெறும்

(அலுவலக செய்தியாளர்)

காது, மூக்கு, தொண்டை சத்திரசிகிச்சை எதிர்வரும் 22ஆம் திகதியன்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நடை பெறவுள்ளது. மேற்படி சத்திரசிகிச்சைக்கென பதிவுகளை மேற்கொண்ட ரி.தனுஷா (வயது 7) மே/பா எம்.திருச்செல்வன். பாரதிபுரம் மேற்கு,மலையாளபுரம், ஆர்.சாந்தகுமார் (வயது 13) மே/பா எஸ் இராசகுமார் 50 வீட்டுத்திட்டம், ஸ்கந்தபுரம், எஸ்.காந்தீயம் (வயது 7) மே/பா சண்முகம் 17 வீரபுரம் ஈரியகுளம் வவுனியா,ஆகியோரை எதிர் வரும் 21ம் திகதியன்று மாலை கிளி.மாவட்ட வைத்தியசாலை நோயாளர் விடுதியில் தங்குமாறு கிளி.மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய. கலாநிதி இ.சிவானந்தன் வேண்டியுள்ளனர். (சோ)


## கால்நடைகளைக்கட்டுப் படுத்தக் கோரல்

(பளை)

பச்சிலைப் பள்ளி பிரதேச எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் கால போக நெற் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் கால்நடை வளர்ப்போர் தங்களுடைய கால் நடைகளைப் பகலில் மேய்த்தும், இரவில் பட்டிகளில் அடைத்தும் வளர்க்குமாறு பச்சிலைப் பள்ளி பிரதேச தமிழீழ பொருண் மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுக் கொள்கின்றனர்.கால் நடைகள் இரவு வேளைகளில் வயல்களில் பிடிக்கப்படும் இடத்து அவைகளுக்கான தண்டப் பணம் அறவிடப்படும் என்றும் அறிவித்துள்ளனர். (11)

## நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன ஏற்பாட்டில் 'கோப்' மருத்துவக் குழுவினர் சிகிச்சை





கிளிநொச்சியை தலைமைப்பணிமனையாகக் கொண்டு இயங்கிவரும் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஐக்கிய இராச்சியத் திலிருந்து வருகை தந்துள்ள கோப் (HOPE) மருத்து வக் குழுவினர் தற்சமயம் வன்னியில் தங்கிநின்று மருத்துவ சேவைகளை ஆற்றுகின்றனர். கடந்த 18ஆந் திகதி ஐயங்கன்குளம் திலீபன் மருத்துவ சேவை நிலையத்தில் கண்பரிசோதனை செய்யப் பட்டு மூக்குக்கண்ணாடி வழங்கியும், பொதுமருத் துவம், உடல் இயன் சிகிச்சைகள் என்பன இடம் பெற்றன.தொடர்ந்து சில தினங்கள் மற்றும் சில திலீபன் மருத்துவசேவை நிலையங்களில் இந்த மருத்துவ சேவை நடைபெற இருக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வீதியோர மின்விளக்குகளில் கவனம் செலுத்துக!

பளை நகர்ப்பகுதியில் உள்ள மின்விளக்குகளில் இரட்டைக் கேணி அம்மன் கோவிலில் இருந்து கிழக்குப்பக்கம் வரு வாய்த்துறை செயலகம் வரையி லான மின்விளக்குகள் எரிவ தில்லை. இரட்டைக்கேணி அம்மன் கோவிலுக்கு மேற்குப்பக்கம் உள்ள மின்விளக்குதான் தொடர்ந் தும் எரிந்கொண்டிருக்கிறது. பலநாட்களாகியும் இவைகள் இன் னும் சீர்செய் ப்படவில்லை என் பது குறிப்பி ந்தக்கது. (11)

—தமிழீழ மாணவர் அமைப்பின் அனுசரணையில்—

# வன்னி தொழில் நுட்ப நிறுவகம் நடாத்தும் மாணவர்களுக்கான கணினி கருத்தமர்வு

(கிளிநொச்சி)

**தமிழீழ மாணவர் அமைப்பின் அனுசரணையில் வன்னி தொழில் நுட்ப நிறுவகம் (vanni Tech) நடாத்தும் கணினிக் கருத்தமர்வு தமிழீழத்தின் சகல மாவட்டங்களிலும் நடாத்தப்பட்டுவருகின்றது.**

இன்று 20ஆம் திகதி யாழ். மாவட்டத்தின் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், கிறிஸ்தவக் கல் லூரியிலும், வவுனியா மாவட்டத் தின் புதுக்குளம் மகாவித்தியால யம், வீரபுரம் மகாவித்தியாலயத்தி லும் 21.10.2004 யாழ். மாவட் டத்தின் சிவப்பிரகாசா வித்தியால யத்திலும், அருணோதயா கல்லூரி யிலும் மன்னார் மாவட்டத்தில் அடம்பன் மத்திய ம.வி, பண்டி விரிச்சான் ம.வி, கருங்கண்டல் ம.வியிலும் 22.10.2004 முல்லைத் தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு ம.வி, உடையார் கட்டு ம.வியிலும் மன்னார் மாவட்டத்தில் தட்சனா மருதமடு றோ.க.த ம பாடசாலை, விடத்தல் தீவு றோ.க.த.ம பாட சாலை, வெள்ளாங்குளம் ம.வியி லும், 23.10.2004 முல்லைத்தீவு மாவட்டத்தில் வித்தியானந்தாக் கல் லூரி, மாங்குளம் ம.வி, மல்லாவி மத்திய கல்லூரியிலும்,

25.10.2004 திருகோணமலை மாவட்டத்தின் நிலாவெளி ம.வி, செல்வநாயகபுரம் ம.வி, விபுலா னந்தா வித்தியாலயத்திலும் 26.10.2004 மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, விக்னேஸ்வரா வித்தியாலயத்தி லும் 27,28.10.2004 மட்டக்களப்பு மாவட் டத்திலும் 29,30ஆம் திகதிகளில் அம்பாறைமாவட்டங்களிலும் இக் கணினி கருத்தமர்வுகள் நடாத்தப் படவுள்ளன. இதேவேளை கடந்த 18ஆம் திகதி இந்தக் கருத்தமர்வு ஆரம்பமானமை குறிப்பிடத் தக்கது. (15)

## மாதாந்த வீரமுரசு நிகழ்வு

பாண்டியன்குளம் ஒட்டங்குளம் பிரதேசத்தின் மாதாந்த வீரமுரசு நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு பொன்னகர் அ.த.க பாடசாலை மண்டபத்தில் ஊரக தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் தலைமையில் இடம் பெற்றது.இந்நிகழ்வின் பொதுச்சுட ரினை முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை சி.மயூரன் ஏற்றிவைக்க, திருவுருவப்படங்களிற் கான ஈகச்சுடரினை மாவீரர்அன்பர சின் தந்தையார் தியாகராசா மற் றும் வலயப் பொறுப்பாளர் ஆகி யோர் ஏற்றிவைத்து மலர்மாலை அணிவித்தனர். அதனைத் தொடர்ந்து கருத்துரைகளை முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர் அ.தனிநாயகம், துணுக்காய் பிரதேச அரசி யல்துறைப் பொறுப்பாளர் செ.புனிதன் ஆகியோர் வழங்க, சிறப்புரையை முல்லை. மாவட்ட அரசியல்துறைதுணைப் பொறுப்பா ளர் சு.சின்னண்ணன் நிகழ்த்தினார். பாடசாலை மாணவர்களின் கவிதை, பேச்சு என்பன இடம்பெற் றன. இந்நிகழ்வில் அரச அரசசார் பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பி னர்கள், பாடசாலை அதிபர், ஆசிரி யர்கள்,மாணவர்கள், பொது மக்கள், போராளிகள் எனப் பல ரும் கலந்து கொண்டனர். (24)

## தையல் டிப்ளோமா பயிற்சிநெறி விண்ணப்பிக்க வேண்டுகை

துணுக்காய்ப் பிரதேச செயலர்பிரிவிற்குட்பட்ட மகளிருக்கான தையல் டிப்ளோமா பயிற்சி 2004, பயிற்சி நெறி 03.01.2005 இல் புதி தாக ஆரம்பிக்கப்படவுள்ளதால் பயிற்சி பெற விருப்பமுடையவர்கள் பிரதேச செயலக பணிமனையில் உள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து 31.10.2004 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் ஒப் படைக்கவும்.

பயிலுனர்கள் அனைவரும் நேர்முகப் பரீட்சைக்குசமுகமளித்து இதில் தகுதியுடையோராக காணப்படும் பட்சத்திலேயே இப் பயிற்சி நெறியில் சேர்த்துக்கொள்ளப்படுவர் என துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் நந்தகுமார் தெரிவிக்கின்றார். (24)

## சட்டவிரோத மின்பாவனையாளர் மீது தமிழீழ காவல்துறை நடவடிக்கை

மட்டக்களப்பு படுவான்கரை பிர தேசத்தில் சட்ட விரோதமாக மின் சாரம் பெறுபவர்கள் மீது தமிழீழ காவல் துறையினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

சனிக்கிழமை பழுகாமத்தில் தமிழீழ காவல்துறையினர் மேற் கொண்ட நடவடிக்கையையடுத்து 'சட்ட விரோதமான மின்சாரம் பெறு வது கண்டுபிடிக்கப்பட்டதுடன் அவ ர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டு ள்ளதாகதமிழீழகாவல்துறை மாவட்ட கண்காணிப்பாளர் தமிழரசன் தெரிவித்தார். ஏனைய பகுதிகளி லும் சட்ட விரோத மின்சாரம் பெறு வோர் மீது நடவடிக்கை மேற் கொள்ளப்படும் எனவும் அறிவித் துள்ளார்.

## போராட்டமும் கல்வியும் இணைந்த நிகழ்வு வரலாற்றுத் தேவையாக இருக்கின்றது

### - மட்டு. அம்பாறை கல்விப்பிரிவுப் பொறுப்பாளர்

"போராட்டத்திற்கு கல்வி காப் பரண், கல்விக்குப் போராட்டம் காப் பரணாகவும் அமைய வேண்டும்" எனும் தேசியத் தலைவரின் சிந்த னைக்கு ஏற்பபோராட்டமும் கல்வியும் இணைந்த ஒரு நிகழ்வு வர லாற்றுக்கு தேவையாகவும் உள் ளது. இவ்வாறு மட்டு. அம் பாறை கல்விப் பிரிவுப் பொறுப் பாளர் விமல்ராஜ் தெரிவித்தார்.

களுதாவளை மகாவித்தியாலயத் தில் தேசிய கல்விக் கல்லூரியின் கணித, விஞ்ஞான மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டு, நடாத்தப் பட்ட கணித, விஞ்ஞான வினா விடைப் போட்டி நிகழ்வின் பரி சளிப்பு விழாவில் கௌரவ அதிதி யாகக் கலந்து கொண்டு பேசிய மட். அம்பாறை கல்விப் பொறுப் பாளர் விமல்ராஜ் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில், இன்று மட்டக்களப்பு மாவட்டத் தில் கணிதம், விஞ்ஞானம், ஆங் கிலம் ஆகிய பாடங்களின் அடைவு மட்டம் மிகக்குறைவாக உள்ளது. இவ்வாறான வினாவிடைப் போட்டி கள் வைப்பதன் மூலம் எமது மாவட்டத்தின் மேற்படி பாடங் களின் அறிவினை மேலும் வளப் படுத்தக் கூடியதாக இருக்கும் என் றார். இம் மாவட்டத்தில் கணித ஆசிரியர்களின் பற்றாக் குறை அதி கமாக காணப்படுகிறது எனவும் இவ்வாறான அறிவு விருத்தி சம்பந்தமாக நிகழ்வுகளை நடாத்தும் கல்விக் கல்லூரிக்கு எம் அமைப்பால் செய்யக் கூடிய அனைத்து உதவிகளையும் செய்ய தயாராக உள்ளோம் என்றார்.

தொடர்ந்து நிகழ்வில் தாழங்குடா கல்விக் கல்லூரியின் பீடாதிபதி சி. பாக்கிராஜா, பட்டிருப்புக் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் எஸ். மனோகரன் ஆகியோரின் உரையும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் பட் டிருப்பு வலய சேவைக்கால ஆலோசகர்கள், கல்விக் கல்லூரி விரிவுரையாளர்கள், பாடசாலை அதிபர்கள், கல்விக்கல்லூரி ஆசிரிய பயிலுனர்கள், பாட சாலை மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கணித,விஞ்ஞான வினா விடைப் போட்டியில் வெற்றியீட்டிய மாண வர்களுக்கு வெற்றிக்கேடயமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.





வவுனியா பூனாவை பகுதியில் ரயிலுடன் மோதுண்டு இறந்த இரண்டு யானைகளை படத்தில்காண்க சம்பவம் கடந்த புதன்கிழமை அதிகாலை இடம்பெற்றமை தெரிந்ததே. (21)

## இன்று வாடியடியில் மருத்துவ சிகிச்சை

வெளிநாட்டிலிருந்து வருகை தந்த வைத்தியர்களினால் பொது மருத்துவம், கண்மருத்துவம் என் பன பூநகரி தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினரின் ஒழுங்குபடுத்தலின் கீழ் 20.10.2004 இன்று பூநகரி வாடியடியில் நடை பெறவுள்ளது. இதில் பயன்பெற விருப்போர் குறித்த தினத்தில் சிகிச் சைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# அச்சுறுத்தலற்ற ஊடகவியற் செயற்பாட்டிற்கு சகல தரப்பையும் ஒத்துழைக்கக் கோரிக்கை!

- நிமலராஜன் நிறைவு நாளையொட்டி இல.த.ஊடகவியலாளர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

**சனநாயகத்தின் காவலர்களான ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகச் செயற்படுவதற்கும் அவர்கள் அச்சுறுத்தலுக்குள்ளாவது தொடராமலிருப்பதற்கும், சகல தரப்பினரும் பூரண ஒத்துழைப்பினை வழங்குமாறு இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் சங்கம் மயில்வாகனம் நிமலராஜனின் நான்காம் ஆண்டுநினைவு நிகழ்வையொட்டி வெளியிட்ட அறிக்கையில் கேட்டுள்ளது.**

மூன்று மொழிகளிலும் உண்மைத்தகவல்களை உடனுக்குடன் ஊடகங்கள், பத்திரிகைகளிற்கு தனித்து நின்று தெரிவித்த சுதந்திர ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் தமிழக் கட்சியொன்றின் ஈனச் செயலிற்கு இவர் இலக்காகி நான்கு வருடங்கள் முடிவுற்ற நிலையிலும், இதுவரை சட்டபூர்வமாக எதுவித நடவடிக்கைகளும் பூர்த்தியாகவில்லை.

ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகத் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கு எவ்வாறான தடைகள் இருந்தாலும் உண்மைத் தகவல்களை உடனுக்குடன் நடுநிலமையாக வெளியிடுவதற்கு ஒவ்வொரு ஊடகவியலாளர்களும் முன்வரவேண்டும்.

2004ஆம் ஆண்டில் அதிகளவில் பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டும், நேரடியாகவும், மறைமுகமாகவும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியுள்ளனர். இந்நிலை தொடராமல் இருப்பதற்கும் சனநாயகத்தின் காவலர்களாக ஊடகவியலாளர்கள், பத்திரிகையாளர்கள் சுகந்திரமாகச் செயற்படுவதற்கும், சகல தரப்பினரும் பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என அந்த அறைகூவலில் கேட்டுள்ளது.

# சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த மினி பஸ் மோட்டார் சைக்கிளுடன் மோதியது

- மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தவர் பலி

(யாழப்பாணம்)

யாழ்.கண்டிவீதியில் உள்ள புங்கங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் இடம் பெற்ற உந்துருளியுடன் மினிபஸ் விபத்தில் உந்துருளியை ஓட்டிச் சென்றவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இதில் ஆனந்தன் வடலி வீதிஅரியாலையைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையாரான கந்தையா கனகரத்தினம் (வயது54) என்பவரே உயிரிழந்துள்ளார்.

முகமாலையில் இருந்து பயணிகளுடன் யாழ். நகர் நோக்கி மிக வேகமாகச் சென்று கொண்டிருந்த மினி பஸ் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த கொண்டிருந்த உந்துருளியுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதனையடுத்து சம்பநதப்பட்ட மினி பஸ்சின் சாரதியும், நடத்துனரும் தப்பியோடி தலைமறைவாகி விட்டனர்

இந்நிலையில் அப்பகுதிக்கு விரைந்த பொலிசார் விபத்துக்குள்ளான வாகனங்களை சம்பவ இடத்தில் இருந்து அகற்ற முற்பட்ட போதுஅங்கு கூடிய மக்கள் நீதிபதியினது விசாரணைகள் இடம் பெறாது சம்பவ இடத்தை விட்டு வாகனங்களை நகர்த்த அனுமதிக்க முடியாது என பொலிசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதனால் ஆத்திரமடைந்த பொலிசார் பொது மக்களைக் கண்மூடித்தனமாக தாக்கினர். இதனால ஆத்திரமடைந்த பொது மக்களும் பொலிசாரை தாக்கியதுடன் கற்களாலும் அவர்கள் மீது வீசித் தாக்கினர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு மேலதிக பொலிசார் வரவழைக்கப்பட்டு மக்கள் கலைத்த பின்னர் அங்கிருந்து வாகனங்களை பொலிசார் அகற்றினர்.(33)

# நிமலராஜனின் 4ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு

## யாழ்.துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் நினைவுரை

(யாழ்ப்பாணம்)

பத்திரிகையாளர் நிமலராஜனின் 4ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் நேற்று முன்தினம் மாலை 2.30 மணியளவில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் யாழ்.மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தலைவர் தவச்செல்வம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணன், யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தலைவர் அன்ரனி ராஜன், பத்திரிகையாளர் பிரசாந்தன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். அதனைத்தொடர்ந்து தமிழீழ தேசியக்கொடியினை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து பத்திரிகையாளர் நிமலராஜனின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை அவரது உறவினர் திருமதி கதிரவேலு ஏற்றினார். உருவப் படத்திற்கான மலர் மாலையை பத்திரிகையாளர் நிமலராஜனின் சிறிய தகப்பனார் லோகநாதன் அணிவித்தார். அதனைத் தொடர்ந்து நின்னைவுரையினை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாணவ ஒன்றியச் செயலாளர் சிவகரன், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் அன்ரனி ராஜன், யாழ்.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நினைவுரை நிகழ்த்திய துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் எமது உரிமைப் போராட்டம் வெல்லப்பட வேண்டும என்பதற்காக தென்னிலங்கை சமூகத்திற்கு மட்டுமல்ல, சர்வதேச சமூகத்திற்கே எமது போராட்டத்தின் உண்மைத் தன்மையை உலகிற்கு எடுத்துக் காட்டியவர் பத்திரிகையாளர் நிமலராஜன் எமது தேசிய பலத்தை உடைக்க வேண்டும் என்பதற்காக நிமலராஜன், நடேசன் போன்ற பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் எனக் குறிப்பிட்டார். அத்தோடு நேற்று யாழ்ப்பாண பேருந்துத் தரிப்பிடத்திற்கு அருகாமையில் மதியம் 12.00 மணி தொடக்கம் 1.00 மணிவரை யாழ்.மாவட்டப் பத்திரிகையாளர்கள் பேரணி ஒன்றையும் நடத்தியிருந்தனர். (36)

# மானியம் வழுங்குமாறு யாழ்.விவசாயிகள் கோரிக்கை

யாழ்.வலிகாமம் மேற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் புகையிலைச் செய்கை சூடுபிடித்துள்ள போதும் அப் பயிர்ச்செய்கைகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கு வளப்பற்றாக்குறை பெரும் தடையாக இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் இடப்பெயர்வுகளால் பாதிக்கப்பட்டிருக்கும் மேற்படி பிரதேச வாழ் விவசாயிகளில் பெரும்பாலானோரின் பொருளாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இந் நிலையில் அரசின் செயற்பாடுகளால் உரத்தின் விலை அதிகரித்திருப்பதுடன், எரிபொருளினது விலையும் நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றன. இதனால் பயிர்ச்செய்கைக்கான முதலீடு அதிகரித்திருப்பதனால் உரிய முறையிலான பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாக விசனம் தெரிவிக்கும் அப்பகுதி பயிர்ச்செய்கையாளர்கள்.

தென்னிலங்கை விவசாயிகளுக்கு மானிய உதவிகளை வழங்குவது போல பாதிக்கப்பட்டுள்ள யாழ். குடாநாட்டு விவசாயிகளுக்கும் அரசு மானிய உதவிகளை வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (33)

# யாழ்.கல்வியற் கல்லூரியில் விரிவுரைகளை ஆரம்பிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசியக்கல்வியல் கல்லூரி இன்னும் ஒருவார காலத்திற்குள் இயங்குவதற்கு வேண்டிய நடவடிக்கையை பீடாதிபதி அ.கமலநாதன் மேற்கொண்டுள்ளார்.

கல்வியல் கல்லூரி மலசலகூடம் நிரம்பியமையால் விடுதியில் உள்ள ஆண் மாணவர்கள் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து விரிவுரைகளும் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றது.

பீடாதிபதி கல்விஅமைச்சுடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து புதிய மலசலகூட குழி அமைப்பதற்கான நிதி கிடைக்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய குழி கட்டும் பணி இடம்பெற்று முடிவடைந்ததும் மீண்டும் விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன. (41)

# மைதானத்தை மக்கள் பாவனைக்கு அனுமதித்த படையினர் காவலரண்களை அகற்றாததால் பாவிக்க முடியவில்லை

## சாவகச்சேரி மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரசபை மைதானத்தை படையினர் மக்கள் பாவனைக்கு அனுமதித்துள்ள போதிலும் அதனை எவரும் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

மேற்படி மைதானத்தை விடுவிக்கக்கோரி படைத்தரப்பினருக்கு ஏற்படுத்தப்பட்ட பல்வேறு விதமான அழுத்தங்கள் காரணமாக அதனை விடுவித்துள்ள படையினர் அம்மைதானத்தைச் சுற்றியுள்ள தமது காவலரண்களை அகற்றாது அவற்றில் தொடர்ந்தும் நிலை கொண்டுள்ளதுடன் அப்பகுதிகளில் புதைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகளை அகற்றி மிதிவெடி அபாயமற்ற பிரதேசமாக அதனை ஒப்படைக்கவில்லை.

இவற்றால் இம்மைதானத்துள் பிரவேசிப்பதால் ஏற்படும் அச்சுறுதல்கள் காரணமாக அதனைப் பயன்படுத்த முடியாதுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது. (33)

# சுழிபுரம் கடலில் கடற்படையினர் சண்டைப்பயிற்சி கடற்றொழிலாளரின் இயல்பான செயற்பாடு பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுழிபுரம் மேற்கு கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்டு வரும் சண்டைப்பயிற்சிகள் காரணமாக அப்பகுதி கடற்றொழிலாளர்களது தொழில் நடவடிக்கைகளுக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக அதிகாலை மற்றும் மாலை வேளைகளில் இத்தகைய சண்டைப் பயிற்சிகளில் ஈடுபட்டு வரும் படையினர் மேற்கொள்ளும் துப்பாக்கிப்பிரயோகம், மற்றும் பீரங்கி தாக்குதல், பயிற்சிகள் காரணமாக அப்பகுதி கடற்றொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்ல அச்சம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலுக்குச் செல்லும் நேரங்களை மையமாகக் கொண்டு (காலை, மாலை) படையினர் மேற்கொள்ளும் இத்தகைய பயிற்சி நடவடிக்கை கடற்றொழிலாளர்களது. இயல்பான செயற்பாட்டிற்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்திருக்கிறது. (33)

# கடத்தப்பட்ட அளவெட்டி இளைஞன் சிகரட் சூட்டுக் காயத்துடன் மீட்பு

(நல்லூார்)

இளைஞர்களினால் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் தந்தையார் மேற்கொண்ட நடவடிக்கையினால் மீட்கப்பட்டுள்ளார்.

அளவெட்டிவடக்கு தேரொட்டி என்ற இடத்தைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் அஜிபன் வயது 19 என்பவரே இவ்வாறு கடத்திச்செல்லப்பட்டவர் ஆவர். கடந்த ஞாயிற்றுக்கிழமை கடத்தப்பட்ட இவ் இளைஞர் சிகரட்சூட்டு காயம் அடிகாயங்களுடன் சுன்னாகம் நாகம்ஸ் தியேட்டரில் வைத்து நேற்று முன்தினம் மீட்கப்பட்டார். மீட்கப்பட்ட இளைஞர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் சம்பந்தமாக கலாச்சாரத்தைப் பேணும் பலர் நடவடிக்கை மேற் கொண்டுள்ளதுடன் பொலிசாரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (41)

## புத்தகக் கண்காட்சி

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கான புத்தகக் கண்காட்சி ஒன்று எதிர்வரும் 30,31 ஆம் திகதிகளில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. பாடசாலை மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக தென்மராட்சி வலய கல்விப்பணிமனை இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (33)

# அச்சுவேலி மகாவித்தியாலயத்திற்கு நிகொட் அமைப்பு உதவி

யாழ்.அச்சுவேலி மகாவித்தியாலயத்தினை அபிவிருத்தி செய்வதற்கு நிகொட் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த காலயுத்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டிருந்த மேற்படி பாடசாலையின் அபிவிருத்தியை கவனத்திற் கொண்டே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் நிகொட் அமைப்பின் நிதி உதவியுடன் மேற்படி பாடசாலையில் மாடிக்கட்டடத் தொகுதியொன்று அமைக்கப்பட்டு வருகிறது. அத்துடன் இப் பாடசாலைக்கு நிகொட் திட்டத்தின் கீழ் மலசலகூட வசதிகள், குடிநீர் வசதிகள் என்பனவும் ஏற்படுத்தப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (33)

# கடற்றொழில் மேம்பாட்டுக்கு சுவீடன் அரசு உதவும்

யாழ். தீவகப்பகுதி வாழ் கடற்றொழிலாளர்களது தொழிற்றுறை மேம்பாடுகளுக்கு உதவ சுவீடன் அரசு முன்வந்துள்ளதாக யாழ்.செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த காலப்போர் மற்றும் இடப்பெயர்வுகளால் பாதிக்கப்பட்டுப் பின்தங்கிப்போயுள்ள தீவகக்கடற்றொழிலாளர்களது நலனைக் கவனத்திற் கொண்டே சுவீடன் அரசு இத்தகைய உதவிகளை வழங்க முன்வந்திருக்கிறது. (33)

# ஆதவனின் அனுபவப் பகிர்வு

## பாகம்-17

என் அன்பு வாசகர்களே......

திகிலும் பயமும் நிறைந்த பயணங்கள் எப்பொழுது நினைத்தாலும் சுவையான நினைவுகளாய் இருக்கின்றன. அவை தான் மனசில் மறக்காமல் நிலையாய் நிற்கக்கூடியன. ஏனைய பயணங்கள் மனசில் இருந்தாலும் நாட் செல்லச் செல்ல அவை சுவை குன்றி மறைந்து விடுகின்றன.

எனது 'அல்ப்ஸ்' மலைப் பயணமும் மனசில் சுவை குன்றாமல இருப்பதற்குக் காரணம் திகிலும் பயமும் தான்.

தன்னந்தனியே முன்னாலும் பின்னாலும் அருகிலும் என்ன இருக்கிறது என்று தெரியாதளவு புகார் முகில்கள் நிறைந்த 'அல்ப்ஸ்' மலைகளின் இடையில் Carஇல் இருப்பது என்பது மிகமிகப் பயங்கரமான அனுபவம்.

மிகப் பெரிய பள்ளத்தாக்குகள் மிக அருகில் இருக்கலாம்.......

Car சறுக்கி அதனுள் விழுந்து நொறுங்கி விடலாம்........

அங்கே Carகளுக்கு Winter காலத்தில் சறுக்காத சில்லுகளும் Summer காலத்தில் சாதாரண சில்லுகளுமாய் மாற்றி மாற்றிப் பாவிப்பார்கள். என்னுடைய Carக்கு நான் இன்னமும் Winter சில்லுகள் பொருத்தியிருக்கவில்லை. அது வழுக்குகின்ற தன்மையைக் கொண்டி ருந்தது.

பனி மலையின் முகடுகள் சில வேளை உருகி உடைந்து பெரிய பாறாங்கற்களாய் தெருக்களில் வீழ்ந்து கிடைப்பதைப் பல தடவை நான் பார்க்கின்றேன்.

அந்தப் பயம்வேறு மனதில் குடிகொண்டது. நான் எனது Carஐ நிறுத்தியிருப்பது தெருவின் அருகிலா....? அல்லது நடுவிலா....? அல்லது வளைவிலா....? என்பது கூடத்தெரியவில்லை.

சிலவேளை ஒரு கனரக வாகனம் என்னைப் போலவே மெதுவாக எதிரே இருந்து வந்து என் Car நிற்பது தெரியாமல் என் மீது மோதும் அபாயமும் இருக்கிறது.

எப்படியோ..... இனி என்ன செய்வது? என்னதான் செய்ய முடியும்?

கதவைத்திறந்து கீழே இறங்கித் தெருவில் நிற்கலாம் என்ற எண்ணம் வந்தது. கதவைத் திறந்தால் அந்த அதிர்வில் Car வழுக்க ஆரம்பித்துவிட்டால் எவ்வாறு அதை நிறுத்த முடியும்? அந்த எண்ணத்தையும் கைவிட்டேன்.

அதீத பயம் வந்தால் மனிதர்கள் ஏன் கண்களை மூடுகிறார்கள்....? பெரும்பான்மையான மனிதர்கள் கண்களை இறுக்க மூடிக்கொள்வார்கள். நானும் கண்களை இறுக மூடலாம் என்று நினைத்தேன். ஒன்றுமே தெரியாதபோது கண்களை மூடி என்ன பயன்? அந்த எண்ணமும் போயிற்று.

பல மனிதர்கள் தமது இஷ்டதெய்வங்களை வணங்குவார்கள். எனக்கு தெய்வ நம்பிக்கை இல்லை. இருந்தாலும் இஷ்டமான தெய்வம் எது என்று அந்த நேரத்தில் கண்டு பிடித்து அதை வணங்கு வது சிரமமாய் இருந்தது.

எனக்குப் பிடித்த ஒரு சந்நியாசி இருந்தார். (அவரைச் சந்தித்த அனுபவத்தை வேறு ஒரு சந்தர்ப்பத்தில் பகிர்ந்து கொள்கின்றேன்) அவர் எனக்குத் தியானிக்கும் மார்க்கங்களை சொல்லித்தந்திருந்தார் அதுவே அப்போதைக்கு நான் செய்யக் கூடிய சிறந்தவழியாக எனக்குப் பட்டது.

நான் தியானம் செய்ய ஆரம்பித்தேன். பிறந்த மண்ணிலிருந்து பல்லாயிரம் கிலோ மீற்றர் தொலைவில் யாருமற்ற ஒரு சூனியத்தில் 'அல்ப்ஸ்' மலைக் கணவாய்களினிடேயே தியானம் செய்து கொண்டிருந்தேன் மறக்கவே முடியாத அனுபவம்.

எவ்வளவு நேரம் நான் தியானித்தேன் என்று சொல்ல முடியவில்லை நிச்சயமாக ஒரு மணித்தியாலத்தை விட அதிகம். ஏதோ ஒரு சிறிய சத்தம் என்னை எழுப்பியிருக்க வேண்டும், என்ன சத்தம் என்று என்னால் இன்று வரை ஊகிக்க முடியவில்லை.

முகில்கள் சற்று விலகியிருந்தன, புகார் குறைந்திருந்தது. 50 மீற்றர்வரை தெளிவாகப் பார்க்க முடிந்தது.

சுற்று முற்றும் பார்க்க ஆரம்பித்தேன் முதல் இருந்ததைவிட, இப்போதுதான் நான் அதிகமாகப் பயந்தேன்.

காரணம் என்ன வென்றால் எனது சாரதிக்கரை ஜன்னலை இறக்கி அருகில் பார்த்தேன்.

அம்மாடி..... ஒரு 1/2 மீற்றர் அருகில் அதலபாதாளம் இருந்தது.

கதவைத் திறந்து நான் இறங்கியிருந்தால் நினைக்கவே....திக் திக்....!

மெதுவாகக் Car ஐ இயக்கினேன் மிகமிக அவதானத்துடன் முன்னே செலுத்தினேன்.

இப்பொழுது 100 மீற்றர் வரை பார்க்குமளவிற்கு தெரு வெளிச்சமாக இருந்தது.

Carனுள் நான் கொண்டு வந்திருந்த ஏதாவது ஒரு இசையைக் கேட்போம், கேட்டால் தான் இந்தப் பயங்கரங்களிலிருந்து விடுபட முடியும் என நினைத்தேன்.

கையிலகப்பட்ட ஒரு Casset ஐப் போட்டேன் எனக்கு மிகவும் பிடித்த ஒரு ஆங்கிலப் பாடல்.

I am leaving you on a jet plane

I don t know when I' llde back again

(ஒரு ஜெற் விமானத்தில், உன்னை விட்டு விட்டு நான் போகின்றேன்.... எப்போது மீண்டும் வருவேன் எனக்குத் தெரியாது)

இந்த வரிகளை மீட்டியபடி Car வளைந்து வளைந்து. 'அல்ப்ஸ்' மலையை ஊடறுத்துக் கொண்டு ஓடிக்கொண்டிருந்தது.

எனக்கு என்தாயகத்தின் நினைவு வந்தது. நான் களவாக இந்தியாவுக்குச் சென்ற பொழுது?

'தாயகமே உன்னை விட்டு விட்டு படகினில் போகின்றேன் எப்பொழுது மீண்டுவருவேனோ தெரியாது.'

அந்தக் காலத்தில் நான் அந்த ஆங்கிலப் பாடலை அறிந்திருக்கவில்லை. ஆனால் இப்போது என் தாயகத்தை நினைக்கையில் அடிக்கடி இந்தப் பாடல் நினைவுக்கு வரும்.

'அல்ப்ஸ்' மலைப்பகுதி குறையக் குறைய தெளிவான கால நிலையும், தெருக்கள் சற்று விரிந்தும், வாகன நடமாட்டங்கள் கூடிக் கொண்டும் இருந்தன.

' இத்தாலியை' நான் அண்மித்துக் கொண்டிருக்கிறேன் என்பதை... என்னைத்தாண்டிச் செல்லும் 'Fiat' Car கள் உணர்த்தின இத்தாலியின் சிறந்த உற்பத்திகளில் Fiat Carறும் ஒன்று.

'இத்தாலி' நாட்டுக் கிராமங்கள் சுவிற்சர்லாந்து கிராமங்களிலிருந்து வேறுபட்டிருந்தன. வேறுபட்ட கலாச்சாரம். அது கொஞ்சம் கரடு முரடான மொழி போல்பட்டது. முதன் முதல் அந்த மொழியைக் கேட்டபோது.... எனக்கு சிற்பிகள் சிலைகள் செதுக்குகையில் உளியை அடிப்பது போன்ற ஓசை அலைகளையே அவை எழுப்பின.

இத்தாலி பற்றிச் சொல்வதற்கிடையில் ஒரு அதிர்ச்சியான விடயம் சொல்ல வேண்டும்.

எனது அந்தப் பயணம் முடிந்து இரண்டு வாரங்கள் கழிந்தன. நான் மீண்டும் சுவிற்சர்லாந்தில் என் வேலையில் மூழ்கியிருந்தேன்.

தொலைக்காட்சியில் செய்தி போய்க்கொண்டிருந்தது.

'ஒரு விசேட அறிவிப்பு' என்று சொன்னவுடன் செவிகளைச் சாய்த்தேன்.

'அல்ப்ஸ்' மலையோரங்களில் பெரியளவிலான பனிப்புயலும், பனிமழையும் வீசுவதாகவும் சில தெருக்கள் முற்றாகவே வெள்ளத்தில் ஆழ்ந்துவிட்டதாகவும் சொல்லிற்று.

ஆழ்ந்துபோன தெருக்களையும், கிராமங்களையும் தொலைக்காட்சியில் காட்டினார்கள்.

நான் நின்று கொண்டிருந்தேனே அதே தெருப்பகுதிதான் அது.

இரண்டு வாரங்கள் நான் எனது பயணத்தைப் பின்போட்டிருந்தால்... நீங்கள் இப்போது இந்த அனுபவப்பகிர்வை வாசித்துக்கொண்டிருக்க முடியாது.

* * * *

இத்தாலியின் பெருந்தெருக்களில் Car ஓடிக்கொண்டிருக்கிறது. 'அல்ப்ஸ்' மலையைப் பார்க்கவேண்டும் என்ற கனவு முடிந்துவிட்டது. பெரிய திகிலுடன் முடிந்தது அது.

அடுத்த எனது இலக்கு 'இத்தாலி' இத்தாலியில் பார்ப்பதற்கு எத்தனையோ இடங்கள் இருக்கின்றன.

உரோமாபுரி, சாய்ந்த கோபுரம், போப்பாண்டவரின் வத்திக்கான், அடிமைகளை மோதவிட்டு சக்கரவர்த்திகள் மகிழும் பெருமைதானம் இப்படியே அடுக்கிக் கொண்டே போகலாம். இத்தாலி பெரியதும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததும் நாகரிகத்திலும், கலையிலும் உச்சம் பெற்று விளங்கிய, விளங்குகிற நாடாகும்.

ஒரு இடத்தைப் பார்ப்பதற்கே ஒரு மாதம்வரை தங்கவேண்டும். 'இத்தாலி'யில் ஏதாவது ஒரு இடத்தை மட்டுமே பார்க்க வேண்டும் என்பது என் இலக்காக இருந்தது.

அந்த இடம் என்ன தெரியுமா? அதுதான் 'வெனிஸ்'

'வெனிஸ்' நகரத்து வணிகன் என்ற கதை சின்னவயசில் நாம எல்லோரும் படித்திருப்போம்.

அத்துடன் எனக்கு ஏன் 'வெனிஸ்' ஐப் பார்க்க வேண்டும் என ஆவல் எழுந்தது என்றால்; ஒரு மாபெரும் நகரம், கடலினுள் கட்டப்பட்டிருக்கிறது. ஆச்சரியமாயில்லையா?

உலகிலேயே சுற்றுலா நகரங்களில் செலவு கூடியது. 'வெனிஸ்' அப்படி அங்கு என்ன தான் இருக்கிறது... எனும் ஆவலும் என்னைத் தூண்டியது.

மேலும், நான் ஒரு 'ஜேம்ஸ் பொண்ட்' பட இரசிகன். ஜேம்ஸ் பொண்ட் படங்களை எத்தனை தடவை பார்த்தாலும் எனக்குச் சலிக்காது. Roger Moor நடித்த ஒரு ஜேம்ஸ் பொண்ட் படம் முக்கால்வாசி அதன் படகுச் சண்டைக்காட்சிகள் 'வெனிஸ்' நகரத்திலேயே படமாக்கப்பட்டன. அதனைப் பார்க்கப் பார்க்க எனக்கு 'வெனிஸ்' நகரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் எழுந்தது.

இத்தாலிப் பெருந்தெருக்களில் உள்ள ஒரு உணவு விடுதிக்குள் சென்றேன். அங்கே தான் இத்தாலிப் பாசையை முதன்முதலில் கேட்டேன்.

கல்லுடைப்பது போன்ற ஓசை. உண்மையில் அந்தக் கரடு முரடான ஓசையிலும் ஒரு இதம் இருந்தது.

அவர்களுடைய பணம் பற்றி சுவாரசியமாக ஐரோப்பியர்கள் பேசுவார்கள். அவர்களது பணத்தின் பெயர் 'லிரா' அவர்கள் பல சைபர்களை உபயோகிப்பார்கள். உதாரணமாக:- எங்கள் 10 ரூபாவுக்கு ஒரு சைபர் உண்டு. அவர்களுக்கு அது 1000 என சைபர்களைக் கூட்டி வைத்திருப்பார்கள். (பெறுமதியில் அல்ல) நான் ஒரு 10ரூபா கொடுத்தால் எனக்கு அவர்கள் 100 தாள்கள் தரவேண்டும்.

டென்மார்க்கில் வாழும் எனது தமிழ் நண்பன் ஒருவன் சொன்னான்.

"இத்தாலிக்கா போகிறாய்...? கடகம் கொண்டு போ"

"ஏன்" என்று கேட்டேன்.

"காசு அள்ளுவதற்குத்தான்" என்றான். உணவு விடுதியில் இருந்தேன். இத்தாலியர்களின் சிறப்பான உணவு PIZZA ஆகும். சரியாகப் பசித்தது எனக்கு. உணவு அட்டையைப் பார்த்தேன். கொஞ்சம் காசுகூட உள்ள PIZZA வை 'ஓர்டர்' செய்தால் நிறையவரும் வடிவாகச் சாப்பிடலாம் என நினைத்து ஒன்றுக்கு ஓர்டர் செய்தேன்.

நான் அவமானப்பட்டு வெட்கப்பட்ட ஒரு நிகழ்ச்சி காத்திருந்தது.

(அடுத்தவாரம் சொல்லட்டுமா)


# சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு மருதங்கேணியில் கௌரவிப்பு நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

சிறுவர், முதியோர் கௌரவிப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் த.ஜெயசீலன் தலைமையில் உடுத்துறை மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வின் மங்கல விளக்கினை மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன், மருதங்கேணி ப.நோ.கூ.சங்க தலைவர் சி.தியாகராசா, உடுத்துறை மகாவித்தியாலய அதிபர் அ.சா.அரியகுமார், ஓய்வு பெற்ற அதிபர் அருளாநந்தம் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை போராளி சி.தாயகன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து வரவேற்புரையினை வீ. தவராசா அவர்கள் நிகழ்த்த சிறப்புரைகளை சி.தாயகன், உடுத்துறை மகா வித்தியாலய அதிபர் அ.சா.அரியகுமார், மருதங்கேணி ப.நோ.கூ. சங்க தலைவர் சி.தியாகராசா, மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் ஆகியோர்உரை ஆற்றினார்கள்.

இந் நிகழ்வில் கிராம சேவையாளர் பிரிவுக்கு ஒருவர் என்ற ரீதியில் 18 கிராம சேவையாளர் பிரிவிலும் இருந்து 18 முதியோர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அத்தோடு முதியோர், சிறுவர் நாளை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டதோடு இறுதியில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், மக்கள் எனப் பலரும் பங்கு பற்றி நிகழ்வைச் சிறப்பித்தனர்.

(தீ)




மக்கள் நடமாட்டமுள்ள கிளிநொச்சி திருநகர் வீதியில் திருநகர் மயானத்திற்கு முன்பாக அமைந்துள்ள நாகதம்பிரான் ஆலய கூரையில் உள்ள பாரிய குளவிக் கூட்டினைப் படத்தில் காணலாம். தற்போது பெய்து வரும் மழை காரணமாக மேற்படி குளவிக் கூடு அச்சுறுத்தலுக்குரியதொன்றாக மாறியுள்ளது.
(படம் சோதி)

11

* தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களைத் தாக்க கண்டியில் சிங்கள இனவாதிகள் முயற்சி.

* மல்வத்தைப் பீடாதிபதி சுமங்கல தேரரை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்தனர்.



மல்வத்த பீடாதிபதியுடன்...

* சுவிஸ் வெளியுறவு அமைச்சர் சனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்தார்.

12

* சமாதானப் பேச்சுக்கள் விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்படாவிட்டால் யுத்த நிறுத்தத்தை அது பாதிக்கலாமென சுவிற்சர்லாந்தின் வெளிவிவகார அமைச்சர் மிக்கெலின் காமிரே கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் தெரிவிப்பு.

* இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள ரணில் இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்தார்.

* இலங்கை இனப்பிரச்சினையில் புதிய இந்திய அரசின் கொள்கையில் மாற்றம் எதுவும் இல்லையென நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார்ஹெல்கேசன் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

* லெப்டினன்ட் கேணல் விக்ரரின் 18 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு மன்னாரில் கொண்டாடப்பட்டது.

* யாழ்.அல்லப்பிட்டியில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் பலி.

* யாழ்.குடாநாட்டிற்கு நோர்வே தூதரகத்தின் பிரதம செயலர் கிறிஸ்ரன் போகர் விஜயம்.

* வவுனியாவில் ஓட்டோ சாரதி கடத்தப்பட்டுக்கொலை.

* ரணில் காங்கிரஸ் தலைவி சோனியாவைச் சந்தித்தார்.

13

* ஒட்டுசுட்டான் கற்சிலை மடுவில் மின்னல் தாக்கி மாணவன் பலி.

* மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரிகள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் தொடர்புடைய இரு பொலிசார் அடையாளம் காணப்பட்டனர்.

* மாவீரர், போராளி குடும்பங்களுக்கு பள்ளிக்குடாவில் வீடுகள் கையளிக்கப்பட்டன.



கையளிக்கப்பட்ட வீடு

* சுகாதார சேவை தொழிற்சங்கக் கூட்டமைப்பினர் கொழும்பில் எதிர்ப்பு ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

* திருகோணமலையில் புலிகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ள இரண்டு ஊர்காவற்படையினரையும் விடுவிக்குமாறு கோரி சிங்களமக்கள் வாழ்கின்ற பகுதிகளில் ஹர்த்தால் அனுஷ்டிக் கப்பட்டது.

14

* சிறிலங்காவின் இராணுவத்தளபதி சாந்தகொட்டேகொட வவுனியா, மன்னாரிற்கு விஜயம்.

* மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 10 விடுதலைப்புலிகள் பிணையில் விடுதலை.

* தமிழீழ விடுதலைப்புலிகள் பிரான்சிலுள்ள ஊடகவியலாளர்களுக்கான சர்வதேச அமைப்பான எல்லை கடந்த ஊடகவியலாளர்களின் அமைப்பு பிரதிநிதிகளையும், சட்டவல்லுனர்களையும் சந்தித்தனர்.



பிரான்சில் சந்திப்பு

* இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரிகள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் ஒரு பொலிசார் அடையாளம் காட்டப்பட்டார்.

* ஐரோப்பாவிற்கு விஜயம் செய்துள்ள அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் பின்லாந்து அரச பிரதிநிதிகளைச் சந்தித்தனர்.

* புலிகளின் இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபைக்கான அரசின் மாற்றுயோசனைகள் தயாரெனவும் அதுவிரைவில் புலிகளிடம் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர செய்தியாளர் மாநாட்டில் தெரிவிப்பு.

* சிறிலங்கா எதிர்க்கட்சித் தலைவர் ரணில், தி.மு.க.தலைவர் கருணாநிதியைச் சந்தித்தார்.

* தென்னிலங்கையிலிருந்து 28பேர் அடங்கிய சமாதானத்திற்கான நல்லிணக்கக் குழுவினர் யாழ்.விஜயம்.

15


* வன்னிப்பகுதியில் இடம்பெற்ற இருவீதிவிபத்துக்களில் 3பேர் பலி, 6பேர் படுகாயம்.



கோரவிபத்து

16

* இணைந்துவாழவேண்டும் என்பதில் நாம் தெளிவாக உறுதியுடன் இருக்கின்றோம். பிரிந்துவாழ பேரினவாதம் நிர்ப்பந்திந்திக்கின்றதென திருமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் எழிலன், கூட்டமைப்பு எம்.பிக்கள் முஸ்லிம் சமூகப் பெரியார்களைச் சந்தித்தபோது தெரிவித்தார்.



மல்வத்ததிருமலையில் சந்திப்பு ...




* சிங்கள ஊர்காவற் படையினர் இருவரும் தமிழீழ நீதிமன்றத்தினால் பிணையில் விடுதலை.

* இலங்கைக்கும், இந்தியாவிற்குமிடையிலான நேரடித்தொலைத் தொடர்பு சென்னையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

* கனடா சிலம்பம் அமைப்பினர் உருவாக்கிய "பொங்குதமிழே" இசைத்தட்டு வெளியீட்டுவிழா நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.



வெளியீட்டு விழாவில்...

17

* இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபை வரைவின் அடிப்படையில் மட்டுமே புலிகள் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு உறுதியாகவுள்ளனர் என அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

* மட்டக்களப்பு புதுநகரில் கிரனைட் தாக்குதலுக்கு இலக்காகி இளைஞர்பலி.

* கோப்பாய்ப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றினுள் இருந்து வயோதிபப் பெண்ஒருவரின் சடலம் மீட்பு.

* மாவீரர் அபயன் நினைவாக மாலை நேர வகுப்பு மண்டபம் பன்னங்கண்டியில் திறந்துவைக்கப்பட்டது.



மாவீரர் நினைவாக....

*நீர்கொழும்பு தளுவத்தைப் பகுதியில் மாணவி உட்பட 5பேரைச்சுட்டுக்கொன்ற கான்ஸ்டபிள் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை.

*"அலைபாடும்பரணி" எனும் இறுவெட்டு அறிமுகவிழா வடமராட்சி நெல்லியடியில் இடம்பெற்றது.

# சிறுமிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம் பாடசாலை அதிபருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

மாணவிகளான இரண்டு சிறுமிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம் புரிந்த பாடசாலை அதிபர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சிறிலங்காவின் அம்பலாங்கொட பொலிஸ் பிரிவில் உள்ள பாடசாலையொன்றின் அதிபர் ஆறு மற்றும் ஒன்பது வயதான இரு சிறுமிகள் மீதும் மேற்படி குற்றம் புரிந்ததாக அம்பலாங்கொட பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பலப்பிட்டி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்தே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஒரு மாதகாலமாக குறித்த சிறுமிகளை தனது அறைக்கு வருமாறு வற்புறுத்தி வந்த இவ் அதிபர் அண்மையில் இக் குற்றத்தைப் புரிந்துள்ளார்.

## கிளி-பூநகரி பேருந்து சேவையை அதிகரிக்கக் கோரிக்கை

கிளிநொச்சி பூநகரி பேருந்து சேவையை அதிகரிக்குமாறு மக்கள் வேண்டுகொள் விடுத்துள்ளனர்.

பூநகரிப்பிரதேச அரச, அரசசார்பற்ற நிறுவன ஊழியர்களின் நன்மைகருதி கிளிநொச்சியில் இருந்து காலை 7.30 மணிக்கு ஒரு பேருந்தும், பிற்பகல் 4.30 மணிக்கு பூநகரியில் இருந்து கிளிநொச்சிக்கு ஒரு பேருந்தும் சேவையில் ஈடுபடுத்துமாறு கோரப்பட்டுள்ளது. இதேவேளை தமிழீழ போக்குவரவுக் கழகத்தினால் கிளிநொச்சியில் இருந்து பூநகரி ஊடாக மடு வரை நடாத்தப்படும் பேருந்து சேவைக்கு மக்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (34)

## கட்சியின் யாப்பை திருத்தியமைக்க ஜாதிக ஹெல உறுமய முடிவு

தமது கட்சியின் அரசியல் யாப் பைத் திருத்தியமைக்க தீர்மானித்துள்ளதாக ஜாதிகஹெல உறு மயக் கட்சியின் பாராளுமன்ற உறுப் பினர் கொட்டபொல அமர கீர்த்தி தேரர் தெரிவித்துள்ளார். இதற்காக குழு ஒன்றினை நியமிக் கவுள்ள தாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். கட்சியில் ஏற்பட்டுள்ள சில பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக 14 குழுக் களை நிறுவுவது குறித்து அரசியல் அமைப்புக் குழு கவனம் செலுத்துமென அவர் தெரிவித்துள் ளார். நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சி மாவட்ட பாடசாலையொன்றில் மாண வர்கள் றபர்பாண்டில் செப்புக்கம்பியினைப் பொருத்தி இழுத்து விளையாடிய பொழுது செப்புக்கம்பி பாய்ந்து சக மாணவனின் கண்ணில் ஏறியதன் விளைவாக அவசர சிகிச்சையின் பொருட்டு நேற்று கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். கம்பி கண்களில் ஏறியுள்ள நிலையில் மாணவனைப் படத்தில் காணலாம்.
(படம்.சோதி.)

# 4ஆம் ஆண்டு நினைவில்



தாயின் மடியில்
12
07
1976

தாயக மண்ணில்
04
10
2000

## கப்டன் சரவணா

**(மாலதி படையணியின் மோட்டார் படையணி)**
**(உதயதாரணிபசுபதி)**

*தாயகத்தின் விடிவிற்காய்*
*தன் உயிர் கொடுத்த உதயதாரணியே!*
*மாலதி படையணியின்*
*சென்றுதிர்ந்த சரவணாவே!*
*உன் உடல் விதையானது*
*உன் உயிர் எம் நாட்டின்*
*சரித்திரத்தில்...*
*என்றும் உன் ஆத்மா சாந்திக்காகவும்*
*பிரார்த்திக்கிறோம்.*

கனகாம்பிகைக்குளம்,
கிளிநொச்சி.
(சி-10581)
தகவல்:-
குடும்பத்தினர்.

# சாவு அறிவித்தல்

## அமரர் கணபதிப்பிள்ளை பாலசாமி

சங்கானை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், இல.30 திருநகர் வடக்கு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பாலசாமி (முன்னாள் ராணி நகைத்தொழிலக உரிமையாளர்) 19.10.2004 அன்று இயற்கையெய்தினார். அன்னார் புஸ்பராணியின் அன்புக் கணவரும், கண்ணன் (கணேசா ஜிவல்லரி வவுனியா), ராசா, பிரபா (தமிழரசி நடைமாடம் கிளிநொச்சி), ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவாஜினிதேவி, கஜேந்தினி, பானு ஆகியோரின் மாமனாரும், ஜிவிதா, துஷான், ஜெயலோஜன், லோஜினி, ஆகியோரின் பேரனும், கருணா-யோகரத்தினத்தின் மைத்துணரும், சர்மலா, சர்மலா-ஜெகன், ரஜீவ், சுஜீவ், சுஜி, சோவிதா, மிதுஷினி ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் ஆத்ம அமைதிக்கான பிரார்த்தனை 20.10.2004 அன்று பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதஉடல் இறுதிக்கிரியைகளுக்காக பி.ப.2.00 மணிக்கு திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
(5202) குடும்பத்தினர்.

## நீர் வரியும் உயரும்

கொழும்பு நகரில் நாளொன்றுக்கு ஐந்து கோடி அறுபது லட்சம் கலன் தண்ணீரை பாவனையாளர்கள் பாவிக்கின்ற படியால், தண்ணீர் வரியை ஏழு மடங்காக அதிகரிக்க முடிவு செய்துள்ளதாக கொழும்பு நீர்வாரிய திணைக்களத்தின் தலைவர் சூரிய ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்

## சர்.நா. நிதியக்குழு நிதியமைச்சரை சந்தித்தது

சர்வதேச நாணய நிதியத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழு ஒன்று நிதியமைச்சர் சரத் அமுனுகமவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இச் சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்று இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி சம்பந்தப்பட்ட பல விடயங்கள் பற்றி இக் கலந்துரையாடலில் உரையாடப்பட்டது.

## தவறிவிட்டது

*பாரதிபுரம் தெற்கு கிளிநொச்சியில் வசிக்கும் சின்னை இராயரட்ணம் கருபையா சந்திரன் என்பவர்களுடைய தேசிய அடையாள அட்டைகளும் பயண அனுமதிக்கட்டை, சிட்டைகள் குடும்பக்காட் பதிவுச் சிட்டையும் 18.10.2004 ஆம் திகதி பரவிப்பாஞ்சான் நடுவப்பணியகத்திற்கும் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு கனகபுரம் அலுவலகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை கிளிநொச்சியில் ஒப்படைக்குமாறு வேண்டுகிறோம்.*

*தகவல் இ. தியாகராசா (5201)*

## நாகபூசனி அம்மன் திருமணசேவை

எமது திருமண சேவையின் மூலம் சீதனம் கொடுக்க வசதி இல்லாமல் திருமணம் செய்யாதிருக்கும் பெண்கள், சீதனம் கொடுத்து திருமணம் செய்யக் கூடிய பெண்கள், சீதனத்தை எதிர்பாராமல் திருமணம் செய்யக்கூடிய ஆண்கள் மற்றும் சர்வதேச ரீதியில் வாழ்கின்ற ஆண், பெண் இரு பாலரின் ஜாதகங்களும் உள்ளன.

மற்றும் ஜாதகம், புகைப்படம் என்பவற்றுடன் நேரிலோ, அல்லது கடிதம் மூலமுமோ தொடர்புகொள்ளவும்.

NO.70
STATION R.D
VAIRAVAR PULIYAN KULAM,
VAVUNIYA
SRI LANKA.
T.P:- 024 6630207
024 2222301
FAX:- 024 2222150
E.mail:- SRI NAGAPUSANI AMMAN THIRUMANASAVAI @YAHOO.COM.

(சி-10580)

-சிங்கப்பூரிலிருந்து கொண்டுவரப்பட்ட-

# ரூபா 72 இலட்சம் பெறுமதியான ஆபரணங்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் எடுத்துவரப்பட்ட 71 இலட்சம் ரூபா பெறுமதியான ஆபரணங்களை விமான நிலை சுங்கப் பிரிவு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் காலை 1.30 மணியளவில் சிங்கப்பூரிலிருந்து சிறிலங்கா வந்த விமானத்தில் இவை கொண்டுவரப்பட்டதாக சுங்க அதிகாரிகள் கூறியுள்ளனர். குறிப்பிட்ட நபர் கொழும்பு,மற்றும் பேருவளை பகுதியில் சட்ட விரோத வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது, இவர் ஒருவருடத்திற்குள் சுமார் 10 தடவைகள் சிறிலங்காவிற்கும் இந்தோனேஷியாவிற்குமிடையே பயணம் செய்திருப்பது விசாரணைகள் மூலம் தெரிய வந்தது.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் - அலகு

# முக்கிய அறிவித்தல்

## வெளிவாரிப் பரீட்சைகள்

## கல்வியாண்டு 2001/2002 மற்றும் 2002/2003

**கலை முதற் தேர்வு 2002 & 2003**
**வணிக முதற் தேர்வு 2002 & 2003**

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் மேற்குறிப்பிட்டபடி 2001/2002 மற்றும் 2002/2003 கல்வியாண்டுகளில் பதிவு செய்த மாணவர்களுக்கான கலை முதற் தேர்வு மற்றும் வணிகமுதற் தேர்வுக்கான பரீட்சைகள் இரு கல்வியாண்டுகளுக்கும் இணைத்து நடாத்தப்பட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளபடியால் இரு கல்வியாண்டு மாணவர்களையும் பரீட்சைக்கு தம்மை தயார்ப்படுத்தும்படி கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.*

*பரீட்சை நடைபெறும் திகதி, விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் அறியத்தரப்படும். மேலதிக விபரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.*

**துணைவேந்தர்**
**18.10.2004**

(சி-10578)

# பணிநிலை வேண்டுகை

குருகுலம் சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் கீழ்வரும் பணிநிலைகளுக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**01) பணிநிலை:- நிர்வாக அலுவலர்**

தகைமை:- க.பொ.த [உ/த] சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**02) பணிநிலை:- களஞ்சியக்காப்பாளர்**

தகைமை:-க.பொ.த [உ/த] வர்த்தகப்பிரிவில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**03) பணிநிலை:- திட்ட இணைப்பாளர்**

தகைமை:-க.பொ.த [உ/த] சித்தியுடன் ஆங்கில அறிவும் இருந்தல் வேண்டும்.

**04) பணிநிலை:- சமையலாளர்**

தகைமை:-குறிப்பிட்ட பணியில் பட்டறிவு இருத்தல் வேண்டும்.

**05) பணிநிலை:- பராமரிப்பாளர்**

**06) பணிநிலை:- கணக்காளர்**

தகைமை- க.பொ.த.[உ/த] வர்த்தகப்பிரிவில் சித்தியடைந்திருத்தல்.

குறிப்பு:- திட்ட இணைப்பாளர் தவிர்ந்த ஏனைய பணிநிலைகளுக்கு பெண்பாலோர் மாத்திரமே விண்ணப்பிக்கலாம்.

தகுதி வாய்ந்தவர்கள் தங்கள் விண்ணப்பப்படிவத்தை பு,ர்த்தி செய்து 25.10.2004 ஆம் திகதிக்கு முன்பு எமக்கு கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

தொடர்புகட்கு:- குருகுலம் சிறுவர் பராமரிப்பு
இல்லம்,
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

(5192)

# 4ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
19
04
1982

வீரச்சாவு
20
10
2000

## 2ஆம் லெப். புயலவன்

**(குமாரசிங்கம் கேதீஸ்வரன்)**

2ஆம் வட்டாரம், கோம்பாவில் மு/புதுக்குடியிருப்பு.

*சம்பவம்: – நாகர் கோவில் பகுதியில் ஓயாத அலைகள் 04 மோதலின் போது*

காலத்தால் அழியாத வரலாறு படைக்க
ஞாலத்தில் ஒளிர்ந்த தீசன்
விடியல் காட்டும் வெள்ளியின் திசை நோக்கி
புயலாக புகுந்து புயலவனாய் நாம மேற்று
அண்ணன் பிரபாகரன் வழியிலே களமாடி நாகர்

கோவிலில் நாசகாரப் படையை எதிர்நின்று
வீரமுடன் களமாடி விண்ணேகி விட்டாய்
விண்ணுயர கதறுகின்றோம் வீரனே – தீசா
ஆறிடுமோ எம் நெஞ்சு ஆயிரம் ஆயிரம் ஆனாலும்..

*புயலவனுடன் வீரச்சாவடைந்த மாவீரர்களையும் அவரின் உடன் பிறவா சகோதரர்களாகிய மாவீரர்கள் குணா,கானகன்,திலகன்,ஈழச்செழியன் ஆகியோருடன் ஏனைய மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.*

தகவல்:-
திரு.திருமதி. குமாரசிங்கம்,
குடும்பத்தினர்,
உறவினர்கள்.

(சி-10505)


# காஷ்மீர் மக்கள் மீது எந்தமுடிவையும் திணிக்கமாட்டோமென்கிறது பாக்.

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் விவகாரத்தில் எடுக கப்படும் எந்த முடிவையும் காஷ் மீர் மக்கள் மீது திணிக்கப்படாது என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் கசூரி தெரிவித்தார். காஷ்மீர் மக்களின் விருப்பத்தின் அடிப்படை யிலேயே இப்பிரச் சினைக்கான தீர்வு இருக்கும் என்றார் அவர். பாகிஸ்தான் பத்தி ரிகைகளுக்கு கசூரி அளித்த பேட்டி இந்தியாவும், பாகிஸ் தானும் காஷ்மீர் பிரச்சினையில் தங்களது முடிவை காஷ்மீர் மக் கள் மீது திணிக்காது. இப்பிரச் சினையில் இந்தியா பாகிஸ் தானைத் தவிர காஷ்மீர் தலைவர் களும் ஈடுபடுவது பிரச்சினைக்குத் தீர்வு காணவெகுவாக உதவும். ஸ்ரீநகர்-முசாபராபாத் இடை யேயான பஸ் சேவை பாஸ் போர்ட் விசா இல்லாமல் நடை பெற வேண்டும் என்பதில் பாகிஸ் தான் உறுதியாக உள்ளது. இதன் மூலம் இருநாட்டிலும் உள்ள குடும்பங்கள் மீண்டும் சேர வாய்ப் பாக அமையும் ஏற்கனவே முடிவு செய்தபடி இருநாட்டு வெளியுறவுச் செயலர்கள் வரும் டிசம்பரில் சந்தித்துப் பேச உள்ளனர். அடுத்த இரண்டு மாதங்களில் இந்திய வெளியுறவு அமைச்சர் நடவர்சிங் இது குறித்துப் பேச பாகிஸ்தான் வருகிறார். என் றார் கசூரி.

## வீரவணக்கம்

தாயின் மடியில் 05 - 09 - 1986



தாயக மண்ணில் 17 - 10 - 2004

தமிழீழ தேசியத் துணைப்படைவீரர்

### ஜெயந்தினி

சந்திரன் ஜெயந்தினி

பழம்பாசி நெடுங்கேணி

வன்னி மாவட்டம் மாங்குளம் பகுதியில் 17.10.2004 அன்று ஏற்பட்ட தவறுதலான வெடி விபத்தில் வீரச்சாவடைந்துள்ளார். இம்மாவீரரின் வித்துடல் பூரண இராணுவ மரியாதையுடன் முள்ளி யவளை மாவீரர் துயிலுமில்லத்தில் 19.10.2004 அன்று விதைக்கப்பட்டது. இம்மாவீரருக்கு எமது வீரவணக் கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

தமிழீழ காவல்துறை சிறப்புப்படையணியினர்

(5198)

## பாக்.கில் சர்வதேச மாநாடு சோனியா பங்கேற்கிறார்

(இஸ்லாமாபாத்)

ஆண்,பெண் பாகுபாடு, பெண் கள் முன்னேற்றம் குறித்த சர்வதேச மாநாடு பெப்ரவரியில் பாகிஸ்தானில் நடைபெறுகிறது. காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஐ.நா பொதுச் செயலர் கொபி அனான் அமெரிக்கப் பாராளு மன்ற உறுப்பினர் ஹிலாரி கிளிண் டன் ஆகியோர் இதில் பங்கேற்கின் றனர். இஸ்லாமா பாத்தில் வரும் பெப்ரவரி 22,23,24 ஆம திகதிகளில் இந்த மாநாடு நடைபெறுகிறது. இதில் பங்கேற்பதை இந்த மூன்று பேரும் உறுதி செய்துள்ளனர். எச்.ஐவி, எய்ட்ஸுக்கான ஐ.நா சிறப்புத் தூதர் நபீஸ் சாதிக் இத்தகவலை நிருபர்களிடம் தெரிவித்தார்.

# பணிநிலை வேண்டுகை

**பாதுகாப்பு உத்தியோகத்தர் பணி நிலைக்கான**

**விண்ணப்பம் கோரல்**

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப் பணியகத்திற்கு பாதுகாப்பு உத்தி யோகத் தருக்கான பணிநிலை வெற்றிடம் உள் ளது.

இவ் வெற்றிடங்களை நிறைவு செய்ய ஆண்களிடம் இருந்து கீழ்காணும் தகை மைகளுக்கமைய வேண்டுகைகள் கோரப்படு கின்றது.

*கல்வித்தகைமை:- க.பொ.த.சா.த (06 பாடங்களில் சித்தி)

*அகவை:- 25-35 வரை

*பிறதகைமை:- சான்றிதழ்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.

*மும்மொழி அறிவுத்திறன் இருப்பது விரும்பத்தக்கது.

*சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 31.10.2004 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்காணும் முகவரிக்கோ, அல்லது நேரிலோ தங்களுடைய விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.

தொடர்புகளுக்கான முகவரி
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்,
நடுவப்பணியகம்,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி

(சி.10392)

# தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## நடத்துநர் பணிக்கான விண்ணப்பம் கோரல்

பின்வரும் தகைமையுடைய ஆண்பாலோர் நடத்துநர் பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

தகைமைகள்:-

01. கல்வித் தகைமை :- ஆண்டு 08
02. அகவை :- 21 தொடக்கம் 35 வரை
03. உயரம் :- 05 அடி 05 அங்குலம்

குறிப்பு:-

01 விண்ணப்ப முடிவு நாள் :- 05.11.2004

02 சம்பளம் :-

$\frac{4430-5530}{10X110}$ +2000.00=6430.00+சிறப்புக்கொடுப்பனவு 3000.00=9430.00

03 விண்ணப்பதாரருக்கான நேர்முகத் தேர்வு :- 07.11.2004 ஆம்நாள் விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகில் உள்ள பணிமனையில் நடைபெறும்.

04 நேர்முகத் தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமை, அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.

05 விண்ணப்பப்படிவங்களை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, கிளிநொச்சி, வெள்ளாங்குளம், முகமாலை ஆகிய இடங்களில் உள்ள நேரப்பணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

*விண்ணப்பம் அனுப்ப வேண்டி முகவரி :*
*முகாமையாளர்*
*ஆளணி ஆளுகைப் பகுதி,*
*தமிழீழப் போக்குவரவுக் கழகம்,*
*நடுவப்பணிமனை,*
*விசுவமடு.*

(10277)

# அரசாங்க அதிபர், போரூட் நிறுவன நிதி உதவியுடன் கொம்டெக் நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்படும் தொழிற்பயிற்சிக்கான விண்ணப்பம் கோரல்

**தொழில் பயிற்சிகள்:**

1. *மேசன் பயிற்சி*
2. *தச்சு வேலைப்பயிற்சி*

**காலம்:** *5 மாதங்கள்.*

**வயதெல்லை:** *17-29 வரையான ஆண்,பெண் இருபாலாருக்கும்*

**கல்வித்தகைமை:** *ஆண்டு 8 சித்தியடைந்திருத்தல் வேண்டும*

இப்பயிற்சி நெறியின் போது ஊக்குவிப்புப் படியாக நாளாந்தம் ரூபா 100/= வழங்கப்படும்.

மேற்படி பயிற்சி நெறி திங்கள் முதல் வெள்ளி வரை முல்லைத்தீவு நகரப்பகுதியில் நடைபெறும்.

இப்பயிற்சி நெறியில் பங்குபற்றி வெற்றிகரமாகப் பயிற்சியை முடித்து வெளியேறுபவர்களுக்கு ரூபா 6000/= பெறுமதியான உபகரணத் தொகுதியும், சான்றிதழும் வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவத்தினைத் தங்கள் பகுதி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.


விண்ணப்பங்கள் யாவும் பு,ர்த்தி செய்யப்பட்டு 28.10.2004 ஆம் திகதிக்கு முன்பதாக அரசாங்க அதிபர், கச்சேரி, முல்லைத்தீவு என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(இமெல்டா சுகுமார்),
அரசாங்க அதிபர்,
கச்சேரி, முல்லைத்தீவு.

*(சி.10579)*

## சிறிலங்காவுக்கு எதிரான டெஸ்ட்போட்டி; முரளிதரன் பங்கேற்காதது மகிழ்ச்சிகரமானது

### இன்சமாம் உல்-ஹக்




இன்று தொடங்கும் சிறிலங்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் இரண்டிலும் முரளிதரன் பங்கேற்காமல் விடுவது தமக்கு மகிழ்ச்சியை அளிப்பதாகவும் அதனால் இத்தொடரை தமது அணி கைப்பற்றும் என்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணித் தலைவர் இன்சமாம் உல்-ஹக் தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த பாக்டெல் முக்கோணப்போட்டியில் சிறிலங்காவை பாகிஸ்தான் அணி இரு போட்டிகளில் வெற்றிபெற்றாலும் இறுதிப் போட்டியில் அது தோல்வியடைந்து கிண்ணத்தைப்பறிகொடுத்தது.இந்நிலையில் அவர் டெஸ்ட் தொடர் பற்றி கூறுகையில்; முத்தையா முரளிதரன் உலகில் தலைசிறந்த பந்து வீச்சாளர் என்றும் அவர் அணியில் இடம் பெறாமை சிறிலங்கா அணிக்கு பெரும் இழப்பு என்றும் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் தனது மண்ணில் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகள் ஏழில் 5 போட்டிகளில் சிறிலங்கா வென்றது. அத்தொடரில் 49 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்முரளி.

எனினும் சிறிலங்கா அணித்தலைவர் அத்தப்பத்து முரளிதரன் இல்லாவிட்டாலும் டெஸ்ட் தொடரையும் தமது அணி கைப்பற்றும் எனக் கூறியுள்ளார்.

## சென்னை டெஸ்டில் மழை குறுக்கிட்டது வருத்தமளிப்பதாக உள்ளது - கங்குலி



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான சென்னை டெஸ்ட் சமநிலையில் முடிந்தது குறித்து இந்திய அணித் தலைவர் கங்குலி நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் இரண்டு அணிக்கும் வெற்றி வாய்ப்பு சமனாகத்தான் இருந்தது. மழை குறுக்கிடாமல் இருந்திருந்தால் இரு அணிகளில் யார் வேண்டுமானாலும் ஜெயித்திருக்கலாம். ஆனால், தற்போது நமது அணி நல்ல நிலையில் உள்ளது. இரண்டாவது இன்னிங்சில் 300இற்கும் அதிகமான ஓட்ட வெற்றி இலக்கு என்றாலும் கூட நாங்கள் எடுப்பதற்கான வாய்ப்பு இருந்தது. இந்த நிலையில் மழை வந்து ஆட்டம் சமனானது வருத்தத்தை அளிக்கிறது" என்றார். மூன்றாவது டெஸ்ட் போட்டியில் சச்சின் வருவாரா? என்பது குறித்து அவரிடம் கேட்டபோது, "சச்சின் தற்போது காயத்தில் இருந்து முழுமையாக குணமடைந்து வருகிறார். நாக்பூரில் அவர் விளையாடுவதற்கு வாய்ப்பு உள்ளது" என்றார்.

மைதானத்தில் இருந்து ஓட்டலுக்குத் திரும்பிக் கொண்டிருந்த அவுஸ்திரேலிய அணித்தலைவர் அடம்கில் கிறிஸ்ட் தெரிவிக்கையில், இரு அணிகளுமே வெற்றியைக் குறிவைத்துத் தயாராக இருந்தோம். ஆனால், யாருக்கும் இல்லாமல் மழை பெய்து ஆட்டம் முடிந்தது ஏமாற்றமளிக்கிறது மழை இல்லாமல் இருந்திருந்தால் ஒரு வேளை ஆட்டம் இந்தியாவுக்குச் சாதகமாக இருந்திருக்கலாம். ஆனாலும் கடைசி நாளில் எதுவும் உறுதி சொல்ல முடியாது" என்றார்.

## டெஸ்ட் தொடரைக் கைப்பற்றுவது உடனடி இலட்சியம் 500 விக்கெட்டைக் கைப்பற்றுவது எதிர்கால இலட்சியம்





அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்று வதே இலக்கு என்று சுழல் பந்து வீச்சாளர் கும்ளே கூறியுள்ளார்.

எதிர்பார்ப்பை உண்டாக்கிய சென்னை டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் எந்த அணிக்கும் சாதகமான முடிவு கிடைக்கவில்லை. மழையின் காரணமாகக் கடைசி நாள் ஆட்டம் இரத்துச் செய்யப்பட்டதை அடுத்து மோதல் சமநிலையில் முடிந்தது, பெங்களூரில் நடந்த முதல் டெஸ்ட் வெற்றியால் அவுஸ்திரேலியா 1-0 என்ற முன்னணியில் இருக்கிறது.எஞ்சிய 2 மோதல்களிலும் வெற்றி பெற்றால் மட்டுமே தொடரைக் கைப்பற்ற முடியும் என்ற சிக்கலான நிலையில் இந்தியா காத்திருக்கிறது.

சென்னை டெஸ்ட்டில் ஆட்டநாயகன் விருது வென்ற அனில்கும்ளே நிருபர்களிடம் கூறுகையில்: சென்னை டெஸ்ட் போட்டியில் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை அதிகமாக இருந்தது, மழையால் இந்த நம்பிக்கை பொய்யாகிப்போனது. எஞ்சிய 2 மோதல்களிலும் வெற்றி பெற்றுத் தொடரைக் கைப்பற்றுவதே என்னுடைய இலட்சியம். டெஸ்ட் கிரிக்கெட்டில் 500 விக்கெட் கைப்பற்றுவது என்னுடைய எதிர்கால இலக்கு. இரண்டு இலக்கையும்அடையும் நோக்கில் நான் எனது திட்டங்களை வகுத்து வருகிறேன் என்றார்.

## பங்களாதேசுக்கு எதிரான போட்டியில் வெற்றி பெறுவது மிக மிக அவசியமானது

### ஸ்ரீபன் பிளெமிங்



பங்களாதேசுக்கான சுற்றுலாவின் போது தாங்கள் பலமான விடயங்களைப் பெற்றுக் கொள்வோம் என்று நியூசிலாந்து அணித் தலைவர் ஸ்ரீபன் பிளெமிங் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் அணியுடனான சுற்றுப்போட்டி அவ்வளவு சிறப்பான சுற்றுப்போட்டியாக நியூசிலாந்திற்கு இல்லாதிருந்ததாலும் கூட அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முதல் பங்களாதேஷில் விளையாடுவதால் அந்தத் தொடரை வெற்றி பெறுவது மிகமிக அவசியமான விடயம் என்று ஸ்ரீபன் பிளெமிங் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு முன்னர் 30 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள பங்களாதேஷ் 27 போட்டிகளில் தொடர்ச்சியாக தோல்வியடைந்துள்ளது.

இது தவிர 2 டெஸ்ட் போட்டிகளில் நியூசிலாந்திடம் தேல்வி கண்டது அது இரண்டும் இன்னிங்ஸ் தோல்வியாக அமைந்தது.

எனவே மீண்டும் அங்கு வெற்றி காண்பது எமது எதிர்பார்ப்பு என்று பிளெமிங் சுட்டிக்காட்டியுள்ளார்.








சமநிலை வேண்டாம் போட்டியை நடத்த விடுங்கள்...'என்று நடுவர்களைப் பார்த்து இந்திய ரசிகர்கள் கோரிக்கை விடுத்தனர்.அவர்களைப்பார்த்து 'முழங்கால் அளவுக்கு தண்ணீர் இருந்தால் எப்படி விளையாட முடியும்'என 'ஜாலியாக' கூறியவாறே வெளியேறுகிறார் நடுவர் டேவிட் ஷெப்பேட்.

## சனத்ஜெயசூரியவின் துடுப்பு 2.1 மில்லியன் ரூபாய்க்கு ஏலம்




சிறிலங்காவின் பிரபல சகலதுறை ஆட்டக்காரரான சனத்ஜயசூரியவின் துடுப்பு (bat) 2.1 மில்லியன் பாகிஸ்தான் ரூபாய்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் ஆதரவுடன் இயங் கும் பாகிஸ்தான் சிறுவர் கல்வி மற்றும் தேசிய மனித அபிவிருத்தி நிதியத்துக்காக மேற்படி மட்டை ஏலத்தில் விற்கப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் கருத்து வெளியிட்ட மேற்படி அபிவிருத்தி நிதிய ஆணையாளர் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இவ்வாறான பல ஆதரவுகளை ஏனைய கிரிக்கெட் ஆடும் நாடுகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ள உதவியளிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

## நடுவர்கள் மீதான குற்றச்சாட்டு கிரிக்கெட் தேர்வாளர்களும் தண்டிக்கப்படுவர்

### இசான்மானி

நடுவர்களைக் குற்றம் சாட்டுகின்ற அல்லது தேவையில்லாமல் விமர்சனம் செய்கின்ற வீரர்களுக்கு அறிவிக்கப்படும் தண்டப்பணம் அறவீடு போன்று நடுவர்கள் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் கிரிக்கெட் தேர்வாளர்களும் இவ்விதிமுறைக்கு உள்ளடக்கப்படுவார்கள் என்று சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத் தலைவர் இசான்மானி தெரிவித்தார்.


ஆரம்பத்தில் வர்ணனையாளர்களைத் தவிர விளையாட்டு வீரர்கள் உள்ளடக்கப்பட்டனர். இனி கிரிக்கெட் தேர்வாளர்களும இதற்கு உள்ளடக்கப்படப் போகின்றார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## ரஷ்ய டென்னிஸ் போட்டி பூபதி ஜோடி தோற்றுப் போனது



சர்வதேச கோப்பைக்கான டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மகேஷ்பூபதி ஜோடி இறுதி போட்டியில் தோல்வியைத் தழுவியது.

சர்வதேசக் கோப்பைக்கான டென்னிஸ் பந்தயம் ரஷ்ய தலைநகரான மொஸ்கோவில் நடந்து வருகிறது. ஆண்கள் இரட்டையர் இறுதிச்சுற்றில் இந்தியாவின் மகேஷ்பூபதி-ஜோர்க்மென் (சுவீடன்) ஜோடி ரஷ்யாவின் இகோர்-நிக்கோலே ஜோடியை எதிர்த்து மோதியது. முந்தைய மோதல்களில் சிறப்பான வெற்றியை எட்டிய மகேஷ்பூபதி ஜோடி இறுதியில் கண்டிப்பாக வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதற்கு ஏற்றாற்போல் முதல் செட்டை மகேஷ் பூபதி ஜோடி வென்றது. ஆனால் பின்னர் நடந்த செட்டில் ரஷ்ய ஆட்டக்காரர்கள் சுதாகரிப்பாக ஆடினர். முடிவில் ரஷ்ய ஜோடி 3-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் சம்பியன்கோப்பையை வென்றது.



சர்வதேச டென்னிஸ் கோப்பைக்கான ஒற்றையர் ஆட்டத்தில இங்கிலாந்து வீரர் ருசெட்ஸ்கியைத் தோற்கடித்து நிக்கோலே சம்பியன் கோப்பையைத் தக்கவைத்துக் கொண்டார்.

## பட்டேலுக்கு அறிவுரை




சென்னை டெஸ்ட் சமநிலையில் முடிவதற்கு இந்திய' விக்கெட்காப்பாளர் பார்த்தீவ் பட்டேலும் முக்கிய காரணம். ஏகப்பட்ட பிடி எடுக்கும் வாய்ப்புகளை இவர் வீணடித்தார். பலத்த எதிர்ப்புகளுக்கிடையே மீண்டும் அணியில் இடம் பிடித்துள்ள இவருக்கு அறிவுரை கூறுகிறார் பயிற்சியாளர் ஜோன்ரைட்


## சூதாட்டக் கும்பல் சிக்கியது

சென்னை கிரிக்கெட் டெஸ்ட் முடிவுகள் தொடர்பாக சூதாட்டம் நடத்திய கும்பல் டில்லி அகமதாபாத் நகரங்களில் சிக்கியது.

இந்திய அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் சென்னையில் நடந்தது. இந்தப் போட்டி முடிவுகள் யாருக்குச் சாதகமாக இருக்கும் என்பது தொடர்பான சூதாட்டம் டில்லியில் நடந்தது. தகவல் அறிந்த டில்லிப் பொலிசார் அதிரடிச் சோதனை நடத்தினர். வடக்கு டில்லிப் பகுதியில் மூன்று பேர் அடங்கிய கும்பல் சிக்கியது. .3 இலட்சம் ரூபா அளவுக்கு சூதாட்டம் நடத்திய அவர்களிடம் இருந்து 20 ஆயிரத்து 700 ரூபா மற்றும் 'டிவி', மொபைல் போன்களைப் பொலிசார் பறிமுதல் செய்தனர்.

குஜராத் மாநிலம்,அகமதாபாத் நகரில் உள்ள மீம் நகர்ப் பகுதியிலுள்ள சூதாட்டம் நடத்திய நான்கு பேர் அடங்கிய கும்பலைப் பொலிசார் நேற்று முன்தினம் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 4 இலட்சம் ரூபா ரொக்கம்,'டிவி', மொபைல் போன்கள் உள்ளிட்ட பல எலக்ரோனிக் சாதனங்கள் கைப்பற்றப்பட்டன.


## மன்னாரில் முரளிதரன்



உலக சாதனை படைத்த கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் எதிர்வரும் மாதம் மன்னார் வரவுள்ளார்.

மன்னார் பொது விளையாட்டரங்கில் பேசாலை "வெற்றியின் நாதம்" என்ற இசைக் குழுவினரின் கலை நிகழ்வில் இவர் கலந்து கொள்ளவுள்ளார். இவரின் வருகைக்கான ஏற்பாடுகளை மன்னார் "காலநதி" என்ற பத்திரிகையாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, ஐ.நா. பிரதிநிதிகளுடன் முரளிதரன் இவ்வாரம் அளவில் யாழ்ப்பாணம் வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மி)



## சிந்தனைக்கு

அறப்போரிலும் சரி, ஆயுதப் போரிலும் சரி, எமது விடுதலைப்போர் உலக சாதனைகளைப் படைத்து வருகின்றது; மனித ஈகையின் சிகரத்தை எட்டியிருக்கிறது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 20-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## பொன்னான வாய்ப்பு!

சமாதான நடவடிக்கைகளுக்குப் பூரண ஆதரவு வழங்குவதற்கு வரலாற்றில் முதற் தடவையாக எதிர்க்கட்சியில் பிரதான கட்சியான ஐ.தே.கட்சி முன்வந்துள்ள நிலையில், சனாதிபதி இது குறித்து மௌனமாக இருப்பது கவலைக்குரிய விடயமாகவுள்ளது'' என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆதங்கத்தை வெளிப்படுத்தும் போது இதற்குக்காரணம்கூறி எவரும் தப்பிக்க முடியாத நிலையேயுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சமாதான முயற்சிகள் குறித்து வலியுறுத்துவது அவரது ''அரசியல் காய் நகர்த்தலின்'' ஓர் அங்கமாக இருக்கலாம். ஆனால் அவரின் கூற்றுக்களுக்கும், செயலுக்கும் இடையில் வேறுபாடு காணப்படாத வரையில் அவரின் கோரிக்கைகள் புறக்கணிக்கத்தக்கவையோ அன்றி நிராகரிக்கப்படத்தக்கவையோ அல்ல.

வரலாற்றில் முதல் தடவையாக எதிர்க்கட்சி ஒன்று சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவு அளிக்க முன்வந்துள்ளது. என்ற எதிர்க்கட்சித் தலைவரின் கூற்றுக்கள் சரியானதே. அதாவது இனப்பிரச்சினைத் தீர்வுதொடர்பான விடயத்தில் எப்பொழுதுமே எதிர்க்கட்சிகள் எவை எவையாக இருப்பினும் ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டதாக இல்லை. தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகள், உடன்பாடுகள் என்பவற்றிற்கு முன்பும் சரி, பின்பும் சரி அவை எதிர்த்தே வந்துள்ளன.

இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்க கூறியிருப்பதுபோன்று வரலாற்றில் முதற்தடவையாக என்பதற்கும் மேலாக வரலாற்றில் இதுவரை கிடைக்கப்பெற்ற அரிய சந்தர்ப்பம் வாய்ப்பு என்று கூடக் கூறலாம். ஏனெனில் இன்றுள்ளதுபோன்றதொரு சூழ்நிலை இலங்கையின் வரலாற்றில் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. இனியும் கிடைக்குமா? என்பது சந்தேகமே.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி பேச்சுவார்த்தைக்குத் தனது ஆதரவை வெளிப்படையாகவே தெரிவித்து வருகின்றது. அத்தோடு பேச்சுக்கள் தாமதப்படுவது யுத்தநிறுத்தத்திற்கும், அமைதிக்கும் ஊறுவிளைவிப்பதாகவும், நாட்டின் எதிர்காலத்திற்கு ஆபத்து விளைவிப்பதாகிவிடும் எனவும் அது எச்சரித்து வருகின்றது. அது மட்டுமல்ல, சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும்போது அரசாங்கத்திற்கு ஆபத்து (கவிழ்ப்பு முயற்சி) ஏதும் நேருமானால் தாம் அரசாங்கத்தைக் காக்க உதவி செய்யத்தயாராக இருப்பதாகவும் அது கூறுகின்றது.

அத்தோடு தமிழர் தரப்பில் இருந்தும் சமாதான முயற்சிகளுக்குப் பூரண ஒத்துழைப்புக் கிடைப்பதற்கான சூழ்நிலையே நிலவுகின்றது. தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடும் சக்தியான விடுதலைப்புலிகளும், அவர்களின் ஆதரவுடன் பாராளுமன்றம் சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் சமாதான முயற்சிகளுக்கு மாறான செயற்பாடுகளில் ஈடுபடமாட்டார்கள் எனத் துணிந்து கூறமுடியும்.

இதனை உறுதி செய்வது போன்று விடுதலைப்புலிகள் இயக்கம் பலமுனை நெருக்கடிகளின் மத்தியிலும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதிலும், யுத்த நிறுத்தத்தைப் பேணுவதிலும் அக்கறை காட்டி வருகிறது. விடுதலைப்புலிகளைப் பொறுத்து தம்மால் வரையப்பெற்ற இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான நகல் திட்டத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தால் சரி.

இந்தவகையில், சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான ஆதரவு ஒருபுறம் இருக்க-விடுதலைப்புலிகளின் திட்டங்களை இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்த நகல்திட்டம் பேச்சுவார்த்தைக்கு அடிப்படையாகக் கொள்ளத்தக்கதெனப் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாகப் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி இந்நகல் திட்டத்தின் அடிப்படையில் பேச்சுக்களை நடாத்த ஒப்புதல் அளித்துள்ளமை மட்டுமல்ல, இதனை அடிக்கடி வலியுறுத்தியும் வருகின்றது.

இத்தனகயதொரு சூழ்நிலையை வரலாற்றில் கிடைக்கப்பெற்ற அரியவாய்ப்பு, சந்தர்ப்பம் எனக் கூறுவதில் என்ன தவறு இருக்கமுடியும். ஒருபுறத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான ஆதரவு அரசாங்கத்தைக் கவிழவிடப் போவதில்லை என்ற உத்தரவாதமும் கிடைக்கப்பெற்றுள்ள நிலையும், மறுபுறத்தில் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கான அடிப்படையாக விடுதலைப்புலிகளின் இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபைக்கான திட்டவரைவும் உள்ளது. இதனையும் பிரதான எதிர்க்கட்சி ஏற்றுக்கொண்டுள்ளதால் அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிக்கத் தயங்கவேண்டிய தேவையில்லை.

ஆனால் அரசாங்கம் அத்தகைய ரீதியில் சமாதானத்தை நோக்கியதாகச் செயற்படவில்லை. வேறு விதமாகக் கூறுவதானால் வரலாற்றில் ஏற்பட்டுள்ள அரிய சந்தர்ப்பத்தை அரசாங்கம் பயன்படுத்தாது தவறிழைத்து வருகின்றதென்றே கூறலாம். ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்காமைக்கு எதிர்க்கட்சியின் மீதோ வெளியில் வேறுயாராவது மீதோ அரசாங்கம் குற்றம்சாட்டுமேயானால் இது அரசின் கோழைத்தனமான செயலாகவே இருக்கமுடியும். ஏனெனில் ஆளும் கூட்டணிக்குள் காணப்படும் தீர்க்கப்படாத இணக்கம் காணமுடியாத பிரச்சினைகளால் பேசித்தீர்க்க முடியாத இக் கூட்டணியினர் வரலாற்றில் கிடைக்கப்பெற்றுள்ள பொன்னான வாய்ப்பைத் தவறவிடமாட்டார்கள் எனக்கூறிவிட முடியாது.

# நிதியுதவிகளில் தங்கியிருக்கும் நாடாக சிறிலங்கா தற்போது மாறியுள்ளது

### -முன்னாள் அமைச்சர் மிலிந்தமொறகொட

(கொழும்பு)

சிறிலங்கா பல்வேறு காரணிகளால் நிதியுதவிகளில் தங்கியிருக்கும் நாடாக மாறியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மிலிந்தமொறகொட தெரிவித்துள்ளார்.

கடந்த ஐம்பது வருடகாலப் பகுதிக்குள் சிறிலங்காவின் பொருளாதாரம் பாரிய அளவில் வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

கண்டியில் இடம்பெற்ற பொதுமக்களின் பிரச்சினைகளைக் கேட்டறியும் கிராமத்தில் இருந்து கிராமம் செல்லும் செயற்திட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற அரசியல் வாதிகளால் முடியாது போயுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

துரிதமாக அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவு குறித்துக் கிராம வாசியொருவர் எழுப்பிய கேள்வி ஒன்றிற்குப் பதிலளித்த மொறகொட எமது நாடு சிங்கப்பூரைவிட முன்னணியில் இருந்த நாடாகும். இருப்பினும் கடந்த 50 வருடகாலமாக எமது நாடு வீழ்ச்சியடைந்துள்ளது. தற்போதைய அரசாங்கம் உறுதிமொழிகளை வழங்கி ஆட்சிக்கு வந்தது. அத்தோடு சற்றுப்பொறுத்திருக்குமாறு கூறுகிறார்கள்.

எமது கொள்கைகள் மாற்றமடைய வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# தப்பியோடிய சிப்பாயுடன் செயற்பட்ட வாகனக் கடத்தல் குழு கைது

(கொழும்பு)

வாகனக் கடத்தலில் ஈடுபட்டுத் தப்பியோடிய விமானப் படைச்சிப்பாய் உட்பட நால்வர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சில தினங்களுக்கு முன் தம்புள்ளயில் இருந்து கெக்கிராவைக்கு வாகனம் ஒன்றை வாடகைக்கமர்த்திச் சென்ற இந் நால்வரும் கல்கமுவ பகுதியில் வாகனச் சாரதியை வெளியே தள்ளி ஒரு மரத்துத்துடன் கட்டி வைத்து விட்டு வாகனத்தைக் கடத்திச் சென்றனர்.

இதையடுத்து உஷாரடைந்த கல்கமுவ பொலிசார் இந் நால்வரையும் கைது செய்துள்ளனர். இவர்களிடமிருந்து ரீ-81 ரக துப்பாக்கியொன்று மற்றும் அதற்குரிய ரவைகள் 21 என்பன பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

# உள்ளூராட்சி மா.சபை தேர்தல்களிலும் ஜாதிக ஹெல உறுமய போட்டியிடும்

### -பா.உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய கட்சிப் பிக்குகளுக்கு மட்டும் சொந்தமானதல்ல சாதராண மக்களுக்கும் உயர் பதவி வகிக்க உரிமையிருக்கிறது என்பதை ஏற்றுக் கொண்டு மீண்டும் உடுவே தம்மாலோக்க தேரர் கட்சிக்குத் திரும்புவர் என அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு பெள்த்தாலோக்க மாவத்தையிலுள்ள காரியாலயத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கும் போது உடுவே தம்மாலோக்க தேரருக்கு அமைச்சரவையில் பதவி வழங்கப்படும் என்பது பற்றி இது வரை முடிவெடுக்கப்படவில்லை என்றும் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல், மாகாணசபைத் தேர்தல் குறிப்பாக சனாதிபதித் தேர்தல் ஆகியவற்றில் கட்சி போட்டியிடும் எனத் தெரிவித்தார்.

# அதிகரித்த வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த எரிபொருளுக்கான 'வற்' வரியை உடன் நீக்குக

### சிறிலங்காவின் முன்னாள் நிதியமைச்சர் கோரிக்கை

(கொழும்பு)

அதிகரித்த வாழ்க்கைச் செலவில் இருந்து மக்களுக்கு நிவாரணம் வழங்க பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவற்றின் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட (வற்)வரியை நீக்குமாறு ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் பிரதியமைச்சர் பந்துல குணவர்த்தன அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவரின் உத்தியோக பூர்வவாசஸ்தலத்தில் நடைபெற்ற ஊடக மாநாடொன்றிலேயே அவர் இக் கோரிக்கையை விடுத்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஒரு பரல் மசகெண்ணையை இன்னமும் 55 அமெரிக்க டொலர்களுக்குக் கொள்வனவு செய்யவில்லை. அரசின் முறையற்ற முகாமைத்துவத்தினாலேயே பாவனைப்பொருட்களின் விலைகள் மக்களால் தாங்க முடியாதஅளவிற்கு உயர்ந்துள்ளன என்றும் கூறினார்.

ஜே.வி.பியின் ஆலோசனையே விலை அதிகரிப்பு வீதத்தை மூன்று வீதத்தில் இருந்து 116 வீதத்திற்கு உயர்த்திச் சென்றுள்ளது என்றும் பந்துல குணவர்த்தன மேலும் கூறியுள்ளார்.

# போர்நிறுத்தம் ஏற்படாதிருந்தால் நாட்டின் நிலை கவலைக்கிடமாயிருக்கும்

### - ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாவிட்டால் நாட்டின் நிலை கவலைக்கிடமாக இருந்திருக்குமென எதிர்க்கட்சித்தலைவர் ரணில விக்கிரமசிங்க தெரிவித் துள்ளார்.

பண்டாரகமவில்கடந்த ஞாயிற் றுக்கிழமைநடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்; நாட்டைப் பிரிக்கவேண்டிய அவசியம் எமக்கில்லை. எனது கொள்கையும் அதுவே ஆகும். நாட்டின் நிலை மோசமடைந்த நிலையில் இருந்த போதே போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தானது.

யுத்தம் தொடர்ந்திருந்தால அது நாட்டிற்குப் பாதகமாகவே அமைந்திருக்கும்.

சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு நாங்கள் உலகின் ஆதரவைப் பெற்றோம். தெற்கில் மாத்திர மன்றி வடக்கிலும் சனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றார் அவர்.

# தமிழர் புனர்வாழ்வுக் கழக உப செயலகம் கொக்கட்டிச் சோலையில் திறந்து வைப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழக மட்டக்களப்பு மாவட்ட உப செயலகம் கடந்த 15 ஆம் திகதி கொக்கட்டிச் சோலையில் திறந்து வைக்கப்பட்டது

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் கு.தேவராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கினை தமிழர் புனர்வாழ்வுக் கழக லண்டன் கிளையைச்சேர்ந்த ராஜ்கோபால் அவர்கள் ஏற்றிவைத்தார்

தமிழர் புனர்வாழ்வுக் கழக உபசெயலகத்தை மட்டு அம்பாறை அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் தயாமோகன் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மட்டக்களப்பு பா. உறுப்பினர் க. தங்கேஸ்வரி அவர்களும் பெருமளவிலான அரச, அரசார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகளும்,பொது மக்களும் கலந்து கொண்டனர். (லோ.தீ)

# சந்தனமரக் கடத்தல் வீரப்பனும் சகாக்கள் மூவரும் சுட்டுக் கொலை!

(சென்னை)

தமிழ் நாடு கர்நாடக மாநிலங்களுக்கு சின்ம சொற்பனமாக விளங்கிய சந்தன மரக் கடத்தல் வீரப்பனும். அவரது மூன்று



சகாக்களும் தமிழ்நாடு விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் நள்ளிரவு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். வீரப்பனின் கண்பார்வைக் குறைவிற்கு சிகிச்சை அளிப்பதற்காக அவரை மருத்துவ மனைக்குக் கூட்டிச் செல்லும் சாக்கில் அவரது மறைவிடத்தில் இருந்து அம்பியூலன்ஸ் வாகன மூலம் வெளியே கொண்டு வந்த தமிழ்நாடு அதிரடிப் படையினர் அமபியூலன்ஸ் வாகனத்தின் மீது கண்முடித்தனமாகச் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதன்போது சந்தன மரக்கடத்தல் வீரப்பனும் அவரது சகாக்கள் மூன்று பேரும் அந்த இடத்திலேயே கொல்லப் பட்டனர்.

இச் சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த தமிழ்நாட்டு விசேட அதிரடிப் படைத் தலைவர் விஜயகுமார் சம்பந்தப்பட்ட அம்பியூலன்ஸ் வண்டியைச் செலுத்தி வந்தவரும் ஒரு அதிரடிப் படை வீரர் எனவும், வீரப்பனின் அணியுடன் ஊடுருவிய அதிரடிப்படை வீரர்களின் உதவியுடன் தங்களால் ஒழங்கு செய்து அனுப்பப்பட்ட அம்பியூ லன்ஸ் வண்டியிலேயே வீரப் பனை வெளியே அழைத்து வந்ததாகவும் கூறியுள்ளார்.

# அச்சத்தை விதைத்து மக்களின் விடுதலை உணர்வை கட்டிப் போடலாம் என அரசு கனவு காண்கிறது

## - மட்டு அம்பாறை அரசியல்துறை அறிவிப்பு

அந்நியப் படைகளோடு சேர்ந்து முன்பு இரத்த வெறியாடிய துரோகிகள் இன்று மீண்டும் கூட்டுச் சேர்ந்து கொலைத்தாண்டவம் ஆடத் தொடங்கியிருக்கின்றார்கள். படைகளோடு ஒட்டுப் படைகளாகச் சேர்ந்து வெறியாட்டம் போடும் கோழைகள் அப்பாவி மக்களையும் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் நாட்டுப் பற்றாளர்களையும் கொன்று குவித்து வருகின்றார்கள். என விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை அரசியல்துறையினர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது்

அவ் அறிக்கையின் விபரம் வருமாறு.

பேரினவாத படைகளின் ஏவலாளியாகச் செயற்படும் கருணா, அவர்கள் போடும் எலும்புத் துண்டுகளுக்காக மாவீரர்களையும், தாய் நாட்டையும் காட்டிக் கொடுக்கும் ஈனப்பயலாகி இழிவின் கடைசிக்குப் போய் மக்களின் தியாகத்தை விற்றுத்தின்று வருகிறார்.

இதில் தமிழ் மக்களாகிய நாம் சில விடயங்களை இனம் காண வேண்டியிருக்கிறது. ஒரு விடுதலை வீரன் ஒருபோதும் அடக்குமுறைப் படையோடு படுத்துத் தூங்குவதில்லை. தாக்குதலை நடத்திவிட்டு ஆக்கிரமிப்புப் படையின் பாசறைக்குள் பதுங்கியதும் இல்லை. எண்ணிக்கையில்லா இன அழிப்பைச் செய்த படைகளின் காலிடுக்குகளுக்குள் இருந்து கொண்டு அச்சத்தை விழைவிக்கும் நடவடிக்கையில் கருணா ஈடுபடுவது ஒரு வரலாற்றுத் துரோகமாகும்.

கருணாவைக் கண்டு அச்சப்பட எம்மக்கள் என்றும் மந்தைகள் அல்லர் மாவீரர்களின் கனவுகள் மலரும் தடைக்கற்கள் அனைத்தும் தகர்க்கப்படும்.

"நிச்சயம் தமிழீழம் மலரும் நிரந்தரமான விடிவு விரைவில் கிடைக்கும்"

# வாகனம் குடைசாய்ந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோண்டாவில் பகுதியில் கன்டர் ரக வாகனம் ஒன்று குடை சாய்ந்ததில் அதில் பயணம் செய்த 8 பேர் காயமடைந்துள்ளனர். யாழ்.கோண்டாவிலில் உள்ள ஸ்ரேசன் வீதிக்கு அண்மையாக நேற்று பிற்பகல் இடம் பெற்ற இச் சம்பவத்தில் காயமடைந்த 8பேரும் யாழ் போதனாவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். வீதியின் சீரற்ற தன்மை காரணமாகவே இவ் விபத்து நேர்ந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (33)

## பிரதம குரு மீது தாக்குதல்

பிதுகிரியப் பிரதேசத்தைச் சேர்ந்த நாகொள்ளாகொட பிரதமகுரு ஆயுதம் தாங்கியவர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டு குளியாப்பிட்டி அரசமருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். பிரதம குருவுக்கும், கிராமிய நிறைவேற்றுக் குழுவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளால் இவர் தாககப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

# கிரிமினல் குற்றங்களுக்கு மன்னிப்பு இல்லை!

## இராணுவத்தினருக்கு தளபதி எச்சரிக்கை

(கொழும்பு)

இராணுவத்தினர் நாட்டின் இறைமைக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் கொலை, கொல்லை மற்றும் பாலியல் வல்லுறவுகளில் ஈடுபட்டு அது நிரூபிக்கப்பட்டால் இராணுவச் சட்டத்தில் அதியுயர் தண்டனை வழங்கப்படும் என புதிய தளபதி சாந்தகொட்டேகொட தெரிவித்துள்ளார் இவர்களுக்கு எக்காரணம் கொண்டும் மன்னிப்பு வழங்கப் படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மென்பானங்களை சூரிய வெப்பத்தில் வைப்பதால் பழுதடைய வாய்ப்புண்டு

## -த.சுகாதாரசேவை அறிவிப்பு

தற்போது எமது பகுதியில் உள்ள பல்பொருள் வாணிபங்கள், மென்பான விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில் மென்பானங்கள் கடுமையான சூரியவெப்பத்தில் வைத்து விற்பனைசெய்வதால் விரைந்து பழுதடையும் தன்மையுடன் நிறமாற்றம், சுவை மாற்றம் என்பனவும் ஏற்படுகின்றது எனவே அனைத்துப் பல்பொருள் வாணிபங்கள், மென்பான விற்பனை நிலையங்கள் நிலைய உட்பகுதியில் மென்பானங்களைப் பேணி விற்பனை செய்யுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர்.

# திருட்டு மணல் ஏற்றி வந்த கன்டர் வாகனம் தீக்கிரை

திருட்டு மணல் ஏற்றிவந்த கன்டர் ரகவாகனம் ஒன்று வடமராட்சி வல்லிபுரம் பகுதியில் வைத்து நேற்று அதிகாலை இனம் தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. வடமராட்சி மணற்காட்டுப்பகுதியிலிருந்து சட்ட விரோதமாக மணல் ஏற்றிக்கொண்டுவந்த மேற்படி கன்டரை வல்லிபுரப்பகுதியில் வைத்து வழிமறித்த குழு ஒன்று அதிலிருந்தவர்களை விரட்டிவிட்டு அதனைத் தீமூட்டியிருந்தனர்.

இதேவேளை வடமராட்சியில் உள்ள பல இடங்களிலும் சட்ட விரோத மணல் அகழ்வுகள் தொடர்கின்றபொழுதும் பொலிசார் இது குறித்து அலட்சியமாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(33)

# சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி மட்டக்களப்பில் திறந்து வைப்பு

சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச் சோலையில் தனது கிளை ஒன்றை கடந்த 15ஆம் திகதி திறந்து வைத்துள்ளது (இது இவ் வங்கியின் ஒன்பதாவது கிளையாகும்.

தமிழர் புனர்வாழ்வுக் கழக மட்டக்களப்பு மாவட்டப் பணிப்பாளர் கு.தேவராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வங்கியின் பெயர்ப்பலகையை மட்டக்களப்பு மாவட்ட சிறுவர்பாதுகாப்பு நிதிய சர்வதேச அணித்தலைவர் கியூரிக் ஸ்பிலம் அவர்கள் திரை நீக்கம் செய்துவைத்தார் வங்கியின் பணிமனையை மட்டக்களப்பு மாவட்ட மக்கள் வங்கியின் முகாமையாளர் எஸ்.சரவணபவன் திறந்து வைத்தார்

மட்டக்களப்பு மாவட்டப் பாரளுமன்ற உறுப்பினர் க.தங்கேஸ்வரி, மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.சரவணபவன், மடடு/அம்பாறை அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் தயாமோகன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்வில் மட்டகளப்பு மாவட்டத்தில் இயங்குகின்ற வங்கிகள் அரச அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோரும் பெருமளவிலான மக்களும் கலந்து கொண்டனர்.இதுவரை வங்கிச் சேவைகள் கிடைக்கப் பெறாத பெருமளவிலான மக்களுக்கு இவ்வங்கி திறந்து வைக்கப் பெற்றது மகிழ்சியளிக்கும் விடயமாகவுள்ளது. (லோ.தீ)

## கலந்துரையாடல்

துணுக்காய் வலயத்துக்கு உட்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை 11.00 மணிக்கு மல்லாவி எடிசன் கல்வி நிலையத்தில் நடைபெற இருப்பதால் துணுக்காய் வலயத்துக்கு உட்பட்ட அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தொண்டர் ஆசிரியர் சங்கத்தினர் கேட்டுக் கொள்கின்றனர்.

## கூட்டங்கள்

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சி பிரதேச வருடாந்த செயற்பாட்டுத் திட்டக் கூட்டம் இன்று காலை 9.00மணிக்கு கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடை பெறவுள்ளது. 2005ஆம் ஆண்டிற்கான கரைச்சி பிரதேச அபிவிருத்தி திட்டங்கள் குறித்து நடைபெறவுள்ள மேற்படி கூட்டத்த் கு சகல திணைகள அதிகாரிகளையும் கலந்து கொள்ளும் வண்ணம் கரைச்சிப் பிரதேச செயலர் செல்வி சுலோஜினி வேண்டியுள்ளார். (சோ)

* * * * * * * * * * *

கிளிநொச்சி மாவட்ட அரச செயலக மண்டபத்தில் நாளை காலை 10.00 மணிக்கு நடைபெறவிருக்கும் மாவட்ட விவசாயச் கூட்டம் நாளை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறுமென அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் 3.30 மணிக்கு மாவட்ட கடற்றொழில் கூட்டம் நடைபெறுமெனவும் எனவே சகல அங்கத்தவர்களையும் கூட்டத்திற்கு தவறாது சமூகமளிக்கும் வண்ணம் வேண்டியுள்ளார். (சோ)

## இந்...

வது குறித்து இறுதி முடிவுகளை எடுப்பதற்காகவும், மேலதிகமான பாதுகாப்பு உதவிகளை இலங்கைக்கு வழங்குவது குறித்து ஆராய்வதற்காகவுமே இலங்கை வந்துள்ள குழுவினர், பாதுகாப்பு அமைச்சரின் உயர் அதிகாரிகள், பாதுகாப்புப் படைகளின் தளபதிகள், சனாதிபதி பிரதமர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களையும் சந்தித்து ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாதுகாப்புக் குறித்து ஒப்பந்த ஏற்பாடுகள் காலதாமதமாக்கப்படுத்தப்பட்ட நிலையில் இன்னும் இரண்டு மாத காலப் பகுதிக்குள் ஒப்பந்தமாக்கி கைச்சாத்திடுவதே இந்தியப் பாதுகாப்பு உயர் மட்டக்குழுவின் இலங்கை விஜயத்தின் நோக்கம் என பாதுகாப்பு அமைச்சுத் தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவிடம் இருந்து இலங்கை பெறவுள்ள ஆயுதக்கொள்வனவில் சீரற்ற உலங்குவானூர்திகள், நீரிலும் நிலத்திலும் பயணிக்கும் வானூர்திகள் மற்றும் விமானப்போர் ஆயுதங்கள் ரொக்கற் லோஞ்சர்கள், ஆட்லறிகள் 7.62 மில்லிமீற்றர் குழல் துப்பாக்கிகள், தளபாடங்கள் மற்றும் இராணுவ வாகனங்கள் உட்பட ஏராளமான இராணுவத் தளபாடங்களும் அடங்குவதாகத் தெரியவருகின்றது. இவை தவிர இராணுவப் பயிற்சிகள், போர் உபாயங்கள், ஆலோசனைகள், இந்திய இராணுவத்தளங்களில் விசேட பயிற்சிகள், உளவுத்துறை ஒத்துழைப்பு, எல்லைகளில் இணைந்த பாதுகாப்பு போன்ற இன்னும் பல விடயங்களும் இப்பாதுகாப்பு ஒப்பந்தத்தில் அடங்குகின்றன. இந்தியா பொதுத்தேர்தலின் பின்னர் கிடப்பிலிருந்த இவ் ஒப்பந்தம், பிரதமர் மகிந்தராஜ பக்ஷ, கதிர்காமர் போன்ற இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் நடத்திய சந்திப்புக்களைத் தொடர்ந்தும் மீண்டும் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த ஒப்பந்தம் இலங்கையில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கும், மலையகத் தமிழருக்கும் மிகவும் பாதகமாக அமைந்துவிடக் கூடிய அபாயம் இருப்பதாகப் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். (32)

## வீரச்சாவு...

மேஜர்-ஈழதாசன், கனகரத்தினம்-கௌசிகன், கோபாலபுரம் நிலாவெளி திருமலை

இப் போராளிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## தேச...

சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இவர்கள் இருவரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் நாட்டுப்பற்றாளர்கள் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

அத்துடன இருவரது வீரச்சாவுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## தேர்தல்...

சமாதானம் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றை முன்னேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இவை இல்லாமையே நாடு இன்று வீழ்ச்சி அடையக் காரணம் எனவும், கடந்த ஏழுமாதகாலமாக ஆட்சியில் உள்ள அரசாங்கம் மறந்தவற்றை ஞாபகப்படுத்தவே இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துவதாகவும் அந்த ஆர்ப்பாட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டது.

## தனது...

பாலசிங்கத்திடம் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் இலங்கையின் சமகால அரசியல் நிலமைகள், கிழக்கு மாகாண நிலமைகள் குறித்து அன்ரன் பாலசிங்கம் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சூல்ஹெய்மிற்கு எடுத்து விளக்கியுள்ளார்.

இச்சந்திப்பினை முடித்துக் கொண்டு நோர்வே திரும்பிய எரிக் சொல்ஹெய்ம், இன்று நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறவுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினருடனான சந்திப்பிலும் கலந்து கொள்வார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.